43

15.7.'56

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

2 அணா

செய்திகள்

ரேடியோ, சினிமா மூலம் கல்வி

ரேடியோவின் மூலமாகவும் சினிமாப் படங்களின் மூலமாகவும் கல்வியைப் பரப்ப இந்திய சர்க்கார் யோசித்து வருகிறார்கள். இதற்காக அகில இந்திய ஆசிரியர்கள் மகாநாடு ஒன்றை டில்லியில் கூட்டினார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்படி இதற்காக ராஜ்ய சர்க்கார்கள் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்களாம். கஷ்டமின்றி, சுலபமாகக் கல்வி கற்க இந்த நூதன முறை மிகவும் பயன்படும் என்று தெரிகிறது.

அணுக்குண்டும் அறிவும்

சென்ற உலக யுத்தத்தில் அணுக்குண்டு வெடிக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அதிலிருந்து மனித வர்க்கத்தின் அறிவுக் கூர்மை அதிகரித்திருப்பதாக ஒரு பிரிட்டிஷ் நிபுணர் கூறுகிறார். பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் எல்லாரும் அணுக்குண்டு வெடிக்கப்பட்ட பிறகுதான் பிறந்திருக்கிறார்கள். அணுக்குண்டிலிருந்து ஸ்டிரான்டியம் என்ற பொருள் ஆகாயத்தில் கலந்து அவர்களுடைய கருவிலும் கலந்திருக்கிறதாம். அதனாலேயே அவர்களுக்குப் புத்திவன்மை அதிகரித்திருக்கிறது என்று தாம்ஸன் என்ற அந்த நிபுணர் கூறுகிறார்.

நல்ல நிலமுள்ள இந்தியா

சாகுபடி செய்வதற்குத் தகுதியான நல்ல நிலம் உலகிலேயே இந்தியாவில்தான் அதிகம் இருக்கிறதாம். ஆஸ்திரேலியாவில் 2 சத வீதமும் பிரேஸிலில் 5 சத வீதமும் கானடாவில் 4 சத வீதமும் சீனா, ரஷ்யா, அர்ஜண்டைனாவில் 9 முதல் 11 சத வீதமும் அமெரிக்காவில் 25 வீதமும் இந்தியாவில் 45 சதவீதமும் இருப்பதாகக் கணக்கு எடுத்திருக்கிறார்கள்.

உலகிலேயே அதிக மழை பெய்யும் இடம்

இதுவரையில் உலகிலேயே அதிக மழை பெய்யும் இடம் சீராபுஞ்சி தான் என்று நாம் படித்துத் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆனால் அதையும்விட அதிகமாக மழை பெய்யும் இடம் ஒன்றை இப்போது அஸ்ஸாமில் கண்டுபிடித்திருக்கிறார்கள். மாஸின்ராம் என்று அந்த மலை ஜாதிக் கிராமத்துக்குப் பெயர். ஒரே மாதத்தில் அங்கே 265.40 அங்குல மழை பெய்திருக்கிறது. ஆறு மாதங்களில் 450 அங்குல மழை பெய்திருக்கிறது. அதே ஆறு மாதங்களில் சீராபுஞ்சியில் 366 அங்குல மழையே பெய்திருக்கிறதாம்.

சிறுவர் சித்திரப் போட்டி

மயிலாப்பூர், கஸ்தூரிபா சங்கம் சங்கத்தினர் சித்திரப் போட்டி ஒன்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். 16 வயதுக்குட்பட்ட சிறுவர் - சிறுமியர் இதில் கலந்துகொள்ளலாம். கறுப்பு மை, பென்சில் அல்லது வர்ணத்தினால் வரையலாம். படங்களை ஜூலை 20-ஆம் தேதிக்குள், ''கஸ்தூரிபா சங்கம், நாட்டு சுப்பராய முதலித்தெரு, சென்னை 4'' என்ற விலாசத்தில் கிடைக்கும்படிப் படங்களை அனுப்பிவிடவேண்டும். கட்டணம் கிடையாது.

பாரதி விழா

ஒவ்வொரு வருஷமும் பாரதி சங்கத்தார் பாரதி மறைந்த செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி விழா நடத்துகிறார்கள். சென்ற வருஷம்கூட இந்த விழா சென்னையில் நடைபெற்றது. இந்த வருஷமும் சென்னையிலேயே நடத்துவதாக அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

கண்ணன்

பொருளடக்கம்

மலர்: 7 இதழ்: 14

15 - 7 - '56

குழந்தைகளே!	பக்கம்	2
பெரிய ஆசாமி	..	3
சைஞ சு - சூ!	..	5
குரங்குமலைக் கோவா	..	11
கர்வ பங்கம்	..	13
யானைக்குட்டி	..	17
பாலர் கவியரங்கம்	..	21
பழைய பாக்கி	..	22
ஏமாந்த சோணாசலம்	..	24
கவிமணித் தாத்தா	..	29
சீத்தலைச் சாத்தனார்	..	30
ஜோடி சேர்	..	32
விஞ்ஞானம் பேசுகிறார்	..	33
புலிக் குட்டி	..	37
குருடனும் நொண்டியும்		40

அட்டைப் படம்-
(போட்டோ) N. ராமகிருஷ்ண
செய்திகள் - 2 - அட்டை.

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-
கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

இனாம்!

அன்று பகல் பன்னிரண்டு மணி இருக்கும். வெயிலின் கொடுமையால் தெருவில் ஜன நடமாட்டம் இருக்கவில்லை. அப்போது அவசரமாக முதலியார்தெரு வழியாக ராசு போய்க்கொண் டிருந்தான். அவசரமாகப் போய்க்கொண் டிருந்த அவன் சட்டென்று தன் காலுக்குள் காற்றினால் தள்ளப் பட்ட காகிதத் துண்டைக் கையில் எடுத்தான். அது பார்ப்பதற்குச் செய்தித் தாளின் கிழிந்த துண்டு போல் காணப்பட்டது, அதில் கண் டிருந்த விஷயத்தைப் பலமுறை படித்தான். அவன் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. அத் துண்டைப் பைக்குள் திணித்துக் கொண்டான். பிறகு தொடர்ந்து மூன்று நாள் அவனைக் காணவில்லை.

நாலாம் நாள் நானும் ராசுவும் கடற்கரை அருகிலுள்ள லைப்ரரிக்குச் சென்றுகொண் டிருந்தோம். தூரத்தில் ஒரு பையன் சிவப்புக் கோட் போட்டுக்கொண்டு போவதைக் கண்டு ஓடிப் போய் அவனோடு ஏதோ பேசிவிட்டு ஏமாற்றத்தோடு திரும்பினான். நான் விஷயத்தைக் கேட்டேன்.

''ஒரு பையனைக் காணவில்லையாம். அவனைப் பிடித்துக் கொடுத்தால் 60 ரூபாய் இனாம் கிடைக்கும்'' என்றான். ''எந்தப் பேப்பரில் வெளி வந்ததுடா?'' என்று கேட்டதற்கு அவன், பைக்குள்ளிருந்து ஒரு துண்டுத் தாளை எடுத்துத் தந்தான். அதை வாசித்துப் பார்த்ததும் எனக்குத் தாங்கொணாத சிரிப்பு வந்தது.

''5 அடி உயரம், நல்ல சிவப்பு. முகத்தில் ஒரு மச்சம் - ஆகியவைகளைக் கொண்ட எனது மகனைக் காணவில்லை. சிவப்புச் கோட் போட் டிருந்தான், தகவல் தெரிவிப்பவர்களுக்கு 60 ரூபாய் இனாம்'' என்று இருந்தது.

''ராசு, இது கதைப் புஸ்தகத்திலிருந்த பக்கமடா'' என்று சிரித்தேன். அப்போதுதான், அவனும் அதைப் நன்றாகப் பார்த்துவிட்டு என்னோடு கூடச் சிரித்தான்.

ரி. எப். சுப்பிரமணியர் (திருமலை)
திருகோணமலை.

குழந்தைகளே!

இந்த இதழில் புரொபஸர் விஞ்ஞானத்தின் புதுப் பகுதி ஆரம்பமாகிறது. மிகவும் பயனுள்ள இந்தப் பகுதியை நீங்கள் பெரிதும் விரும்பிப் படிப்பீர்கள் என்று நம்புகிறேன். சங்ககாலக் கவிஞர் வரிசையின் கடைசிக் கட்டுரையும் வருகிறது. இதற்குப் பிறகு இடைக்காலக் கவிஞர் வரிசை விரைவில் ஆரம்பமாகும்.

இந்த இதழின் மூன்ருவது அட்டையில் தொடர்கதைப் போட்டி பற்றிய அறிவிப்பைக் காணலாம். சென்ற வருஷம் நடந்த தொடர்கதைப் போட்டியை நீங்கள் அறிவீர்கள். சுமார் நூறு பேர்கள் அதில் கலந்துகொண்டார்கள். ஆயினும் இருவர்தான் வெற்றி பெற்ருர்கள். மற்றும் சிலர் பாராட்டுப் பெற்ருர்கள். முன்பு வெற்றி பெருதவர்கள் அதனுல் அதைரியமடைய வேண்டியதில்லை. இப்போது மற்றவர்களும் வெற்றி பெற ஒரு சந்தர்ப்பம் வந்துவிட்டது. ஆகவே எல்லாரையும் இதில் உற்சாகமாகக் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். சும்மா உட்கார்ந்திருக்கும் போதெல்லாம் ஏதாவது ஒரு நல்ல சம்பவத்தைப்பற்றி எண்ணிப் பாருங்கள்; நன்ருகச் சிந்தியுங்கள். உங்கள் மனத்திலேயே அதை ஒரு நல்ல கதையாக உருவாக்கிக் கொள்ளுங்கள். அதை அவ்வப்போது குறித்து வைத்துக்கொண்டால், அப்புறம் எழுதும் போது உங்களுக்குப் பயன்படும். அன்ருடம் ஒய்வு கிடைக்கும்போதெல்லாம் உட்கார்ந்து கதையை மேலே மேலே ஜோடித்து எழுதுங்கள்.

கண்ணன் அளவில் 36 பக்கங்களுக்குமேல் 64 பக்கங்களுக்குள் வரும்படியாக எழுதினுல் போதும். ஒரே பக்கத்தில் மையினுல் தெளிவாக எழுதுங்கள். மற்ற நிபந்தனைகள் எல்லாம் வழக்கம் போலத்தான். ஆனுல் ஒன்று மட்டும் முன்னதாக எச்சரித்து வைத்துவிட விரும்புகிறேன். அதாவது தயவு செய்து சென்ற ஆண்டு எழுதி அனுப்பிய கதையையே மீண்டும் அப்படியே அநாயாசமாக அனுப்பிவிடக்கூடாது. அல்லது வேறு ஒருவருடைய கதையை எடுத்து, கொஞ்சம் அங்கே இங்கே மாற்றி அனுப்பிவிடாதீர்கள். சென்ற ஆண்டு இப்படி யாரும் செய்யவில்லை என்பதை மிகப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்கிறேன். கதை உங்களுடைய சொந்தக் கற்பனையாகவும், நீங்களே உங்கள் கைப்பட எழுதினதாகவும் இருக்கவேண்டும். எழுதிப் பழகுவதற்கு உங்களுக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

இந்தப்போட்டிக்கு அனுப்பும் கதைகளை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவது நல்லது. திரும்பப் பெற விரும்புவோர் அதற்கும் சேர்த்துத் தபால்தலை வைத்து, தெளிவான விலாசமும் குறிப்பிட் டிருக்கவேண்டும். உறையின் மேல், 'கண்ணன் தொடர்கதைப் போட்டிக்கு' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும்.

இந்தக் கதைகளைப் பரிசீலனை செய்ய ஒரு பஞ்சாயத்துக் குழு ஒன்று அமைக்கப்படும். எந்தக் கதை மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறதோ அதைத் தொடர்கதையாகக் கண்ணனில் வெளியிடுவோம். பிறகு அதைப் புத்தகமாகவும் வெளியிடுவோம். இரண்டு சந்தர்ப்பத்திலும் சம்மானம் தனித்தனியே வழங்கப்படும். எழுதும் திறமையுள்ள குழந்தைகள், குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் இந்தப் போட்டியில் கலந்துகொள்வார்கள் என்று நம்புகிறேன்.

சித்திரப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சித்திரங்களை விரைவில் கண்ணனில் வெளியிடுவோம். நீங்கள் வெகு ஆர்வத்தோடு படித்துவந்த லீடர் மணி இப்போது அழகிய புத்தக உருவில் வெளிவந்திருக்கிறது. வெளியூர்களில் உள்ளவர்கள் கண்ணன் ஏஜெண்டிடமே பெற்றுக்கொள்ளலாம். அல்லது நேரே காரியாலயத்துக்குப் பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர்

பெரிய ஆசாமிகள்

தி. வி. ஹரிகிருஷ்ணன்

நானும் நண்பர் முத்துவும் காஞ்சிக்குச் செல்லக் கடற்கரை நிலையத்தில் ரெயில் ஏறினோம். வண்டி எழும்பூர் நிலையத்தில் நின்றதும் இரண்டு பேர்வழிகள் நாங்கள் உட்கார்ந்திருந்த பெட்டியில் ஏறி எங்களுக்கு எதிரில் அமர்ந்தார்கள். நாங்கள் ஏறியிருந்தது இரண்டாம் வகுப்புப் பெட்டியாதலால் அவர்களோடு சேர்த்து நான்கே பேர்கள் தான் இருந்தோம். அவர்களைப் பார்த்தால் கிராம வாசிகளைப் போல் தோன்றியது. ஆனால், கையில் நிறைய மோதிரங்கள், கழுத்தில் தங்கச் சங்கிலி, காதில் கடுக்கன் முதலியவற்றை அணிந்து கொண்டிருந்தனர். இருவரில் ஒருவர் பேசத் தொடங்கினார்.

''ஏன் குப்பா, நேற்று உனக்கு வியாபாரம் எப்படி?''

''ரொம்ப மோசம், கண்ணா. நேற்று இரண்டாயிரம் நஷ்டம்.''

''இந்த வாரமெல்லாம் அப்படித்தானா?''

''இப்படியே இந்த வாரத்தில் எனக்கு நஷ்டத்துக்கு மேலே நஷ்டம்...ஆமாம், உன் வியாபாரம் எல்லாம் எப்படி?''

''எனக்கும் அப்படித்தான், குப்பா. விலை ஏறுதேன்னு சந்தோஷமாயிருக்கிற சமயத்திலே இப்படி நஷ்டம் அதிகமாகிறது. இரண்டு நாளைக்கு முன்னே எனக்குப் போட்டியா முருகேசன் சரக்கை வரவழைத்தான். அதனாலே இரண்டு பேருக்குமே நஷ்டம்தான். அன்னிக்கு எனக்கு இரண்டாயிரம் நஷ்டம்'' என்றான் கண்ணன்.

அவர்கள் பேசுவதைக் கேட்டதும், 'ஆளைப் பார்த்தால் கிராம வாசிகளைப் போலிருக்கிறார்கள். பேசுவதெல்லாம் ஆயிரக் கணக்கிலே பேசுகிறார்களே' என்று விழித்தேன். நண்பர் முத்துவும் அப்படித்தான் விழித்தார். அடடே, அவரைப் பற்றி உங்களுக்குச் சொல்ல மறந்துவிட்டேனே!

அவருக்குப் பணக்கார ஆசாமிகளைக் கண்டால் எப்படியாவது சிநேகிதம் பிடிப்பதுதான் வேலை. ஆனால் அதற்காக நிறையச் செலவு செய்துவிட மாட்டார். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண் வைக்கும் பேர்வழிதான்! எதிரிலிருப்பவர்களைக் கண்டதும் அவர்கள் பணக்காரர்களாகத்தான் இருக்கவேண்டும் என்ற எண்ணம் நண்பர் முத்துவுக்கு ஏற்படவே, அவர்களிடம் பேசச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார்.

அப்பொழுது வண்டி தாம்பரம் நிலையத்தில் நின்றது. அங்கிருந்த ஒருவரை அழைத்து நாலு கிரஷ் வரவழைத்து அவர்களுக்கும் கொடுத்தார். அறிமுகமற்றவர்களிடம் கிரஷ் வாங்கிக் குடிக்க அவர்கள் தயங்கினார்கள். 'பரவாயில்லை, நீங்க சாப்பிடுங்க' என்று இருமுறை மறுத்துக் கூறினார்கள். ''உங்களுக்கெதிரில் நாங்கள் மாத்திரம் குடிப்பது என்னமோ மாதிரி இருக்குது'' என்றார் முத்து. மேலும் மறுத்துக் கூறமுடியாத நிலையில் அவர்களும் வாங்கிக் கொண்டார்கள்.

அவர்கள் குடிப்பதைக் கண்டதும், தம் வலையில் விழுந்து விட்டார்கள் என்றுதான் மனத்துக்குள் முத்து எண்ணிக் கொண்டார். அவர்கள் இருவரும் மீண்டும் பேச்சைத் தொடங்கினார்கள்.

''கண்ணு, நேற்று ராமன் எனக்குப் போட்டியா பூ வரவழைத்தானே. அதனாலே, அவனுக்கு ஆறாயிரம் நஷ்டமாம்.''

''ஆமாம், நாம் இப்படியே நஷ்டப்பட்டுக்கொண்டு போனா எப்படிப் பிழைக்கிறது?''

''அதுக்கென்ன செய்யமுடியும், கண்ணு? நான்கூட வேறு வியாபாரம் செய்யலாம்னு எண்ணிக் கிட்டிருக்கேன்......'' என்று குப்பன் பேசி முடிப்பதற்குள் எனது நண்பர் முத்து, இடைமறித்து, ''ஏன் சார், நீங்க என்ன வியாபாரம் செய்யறீங்க?'' என்றார் ஆவலுடன். அதற்கு, ''ரோஜாப் பூ வியாபாரம் செய்யறேன். ஏன், நீங்கள்கூட பூ வியாபாரியா?'' என்று கேட்டான் குப்பன்.

''ரோஜாப் பூ வியாபாரத்திலா நாலாயிரம் ஆறாயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்படுது?'' என்றார் முத்து ஆச்சரியத்துடன்,

''ஹி...ஹி...ஹி..! நாங்க மூவாயிரம், நாலாயிரம்னு பேசினதெல்லாம் ரூபாய்களென்று நினைத்து விட்டீர்களா! நாங்க இவ்வளவு நேரம் பேசிக்கிட்டு வந்தது தினமும் எங்களுக்கு வரும் சரக்கில் விற்காமல் அழுகிப் போகும் ரோஜாப் பூக்களின் எண்ணிக்கையைத்தான். அது எங்களுக்கு ஆயிரக் கணக்கில் வருவதால் நாங்களும் ஆயிர கணக்கில் பேசிக்கிட்டு வந்தோம். எங்களுக்கு ஆயிர ரூபாய்க்கே வழியில்லையே! அப்படியிருந்தால் ஏன் சார், இந்தப் பாழாப்போன வியாபாரத்திலே கஷ்டப்படணும்?'' என்று ஒரு குட்டி விளக்கமே செய்துவிட்டார் கண்ணன்.

வண்டி அதற்குள் செங்கல்பட்டு நிலையத்தை அடைந்தது. அந்தப் பேர்வழிகள் இருவரும் நன்றி செலுத்தி விட்டு இறங்கிவிட்டார்கள்.

''என்ன முத்து, 'பெரிய ஆசாமி'களென்று ஏமாந்து கிரஷ் வாங்கிக் கொடுத்தோமே' என்று விழிக்கிறீர்களா?'' என்றேன்.

பெரிய ஆசாமிகள்தான்! எப்படியோ கிரஷ்ஷைத் தட்டிக் கொண்டார்களே!'' என்றார் அவர் வருத்தத்தோடு.

அவர் முகத்தைச் சுளித்துக் கொண்டார். நான் எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

கீழ்வானம் சிவந்து, சந்திரன் நெருப்புப் பந்துமாதிரி மெல்ல மெல்ல எழும்பி வந்தான். சிறுவர்கள் இருவரும் முடிந்த வரையில் வேகமாகத் துறைமுகத்தை நோக்கி ஓடினார்கள். முள் வேலி போட்டு, யாரும் கரையோரமாகத் துறைமுகத்துக்கு வர முடியாதபடி தடுத்திருந்தார்கள். ஆனால் இவர்கள் இருவரும் எப்படியோ புகுந்து அடித்து, துறைமுகத்துக் கட்டைச் சுவரை நெருங்கிவிட்டார்கள்.

அலைகளின் மோதலைத் தடுத்து, சுவரைப் பலவீனப்படுத்தமாலிருப்பதற்காக, பெரிய பெரிய கற்பாறைகளையும் சிமென்டுப் பாளங்களையும் அணைப்பாகக் குவித்துப்போட்டிருந்தார்கள். தூரத்திலிருந்து பார்த்தால் ஏதோ சாதாரண மதில் சுவர் போலிருந்த துறைமுக மதில், அருகே போனபோது உறுதியானதாகவும் உயரமாகவும் இருப்பது தெரிந்தது. சீறி வரும் பேரலைகள் பாறைகளிலே மோதி மோதிச் சிதைந்து போயின. சில சமயம் தண்ணீரைக் கட்டைச் சுவரின் மேல் வாரியடித்தன. பாரம் தூக்கிகளும், ரெயில்வே எஞ்சின்களும் ஓடுவதற்காக, கட்டைச் சுவரின்மீது கடைசி வரையில் தண்டவாளங்கள் அமைத்திருந்தார்கள். இரண்டொரு ரெயில் பெட்டிகள் நிலக்கரியை நிரப்பிக்கொண்டு நின்றன.

சீனனும் ஷங்கங்கும் மலைக்குன்றின் மீது ஏறுபவர்கள்போல, சிமென்டுப் பாறைகளின்மீது கையையும் காலையும் ஊன்றி வேகமாக ஏறினார்கள். அந்தக் கிழவர் விழுந்து கிடந்த இடத்தை உத்தேசமாக இலக்கில் வைத்துக்கொண்டு, ஏறினவுடனே ஓடிச்சென்று பார்த்தார்கள்.

கிழவர் பேச்சு மூச்சில்லாமல், நன்றாக அடிபட்டு, பாறைகளுக்கிடையே அகப்பட்டுக்கொண்டு கிடந்தார். ஷங்கங் மட்டும், வெகு சாமர்த்தியமாகத் துறைமுகச் சுவரில் ஏறி, கப்பல்கள் எல்லாம் நிற்கிற உட்புற தேக்கத்தைப் பார்த்தான்.

துறைமுகம் பெரிய வட்டமாக இருந்தது. கிழக்குப் பக்கத்தில் கடலிலிருந்து கப்பல் நுழைவதற்காக, ஒரு பெரிய இடைவெளி விட்டு, சுவர் முடிந்திருந்தது. மேல்புறத்தில் கப்பல் ஒன்று தளத்தில் நின்றிருந்தது. நடுவில் உள்ள தேக்கம் சுமார் இருநூற்றைம்பது அடி ஆழமாவது இருக்கும் போலிருந்தது. ஷங்கங் பார்த்த

போது, கிழவரோடு சண்டையிட்டவனே, அல்லது வேறு யாரோ ஒருவன் மோட்டார் படகில் கப்பலை நோக்கிக் குறுக்கே போய்க் கொண்டிருந்தான். மேல் புறத்தில் துறைமுகக் காரியாலயங்கள் எல்லாம் நிலவில் மங்கலாகத் தெரிந்தன.

அந்தப் பக்கத்தில் துறைமுகத்துக்குள் சுவர் ஓரமாக ஓர் ஆள் இறங்குவதற்கு வசதியாக அங்கங்கே சிறிய படிக்கட்டுகள் இருந்தன. கிழவனை அடித்துவிட்டுப் போனவன் படிக்கட்டு வழியாகத்தான் போயிருக்கவேண்டும். ஷங்கங் திரும்பி வந்துவிட்டான்.

''மூச்சு இருக்காடா?'' என்று சீனனிடம் கேட்டான்.

''மூச்சு இருக்கு! வா, இரண்டு பேருமாகத் தூக்கி, வெளியிலே போடுவோம்!'' என்றான் சீனன்.

மிகவும் பிரயாசைப்பட்டு, எப்படியோ கிழவனை மேலே தூக்கினார்கள். கிழவனுடைய சட்டைத் துணியெல்லாம் நார் நாராகக் கிழிந்திருந்தது. மூக்கிலிருந்து லேசாக ரத்தம் வழிந்துகொண் டிருந்தது. கையும் காலும் ஒடித்துப் போட்டது மாதிரி, தூக்கும்போது தொங்கிக் கனத்தன.

''அதோ பாத்தியா - அந்தப் பெட்டி!'' என்று சீனன் அந்தப் பாறையிடுக்கில் சிக்கிக் கிடந்த பெட்டியைப் போய் எடுத்தான்.

''நல்ல வேளை, அது எக்கச் சக்கமாக மாட்டிக்கொண்டு அந்தரத்தில் நிற்கிறது. இன்னும் கொஞ்சம் சாய்வாக விழுந்திருந்தால், பாறைகளுக்கு அடியில்போய் விழுந்திருக்கும். அதுவரையில் அதிருஷ்டம் தான்!'' என்று சொன்னான் ஷங்கங்.

கிழவனுடைய சட்டைப் பையில் ஏழெட்டு ஐந்து ரூபாய் நோட்டுகளும், மற்றொரு பையில் ஒரு சாவியும் விலாசச் சீட்டும் தங்கியிருந்தன. இதெல்லாம் சண்டையின் போதும், கீழே விழுந்த போதும் விழாமல் இருந்தது பெரிய ஆச்சரியம்தான். ஆச்சரியம் கூட இல்லை; பெரிய அதிருஷ்டமே தான்.

மங்கிய நில வொளியிலே விலாசச் சீட்டைப் படிக்க முடியவில்லை. மேலே என்ன செய்வதென்றும் அவர்களுக்குப் புரியவில்லை.

''வாடா, இந்த நோட்டு ஆச்சு; பெட்டியாச்சு. எடுத்துக் கொண்டு போயிடலாண்டா! இன்னும் இங்கே இருந்தா வம்புடா!'' என்றான் ஷங்கங்.

''சேசே! அப்படியெல்லாம் செய்யக் கூடாதுடா! ஒரு உயிரைத் தவிக்க விட்டுட்டுப் போகக்கூடாதுடா!'' என்றான் சீனன்.

ஷங்கங் அந்தச் சிறு பெட்டியைத் திறக்க முயன்றான். எது மூடி, எது அடி என்று தெரியவேயில்லை. திறக்கவும் முடியவில்லை. பெட்டியோ கிழங்காகக் கனத்தது. பார்க்க அழகாகவும் பூவேலைப் பாட்டுடனும் இருந்தது. மெதுவாக அந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டு போய்விடலாம் என்றே அவனுக்குத் தோன்றியது. இல்லாவிட்டால், கிழவனால் வீண் வம்புகளில் இருவரும் மாட்டிக் கொள்ளும்படி நேரும் என்று அவன் கருதினான்.

''நம்மைச் சுங்கப் போலீஸ்காரன் யாராவது பார்த்தால், உள்ளே போய்க் கம்பி எண்ண வேண்டியதுதான். வாடா சீனா! போகலாம்; நேரமாயிட்டுது'' என்றான் ஷங்கங் மறுபடியும்.

சீனன் கேட்கவில்லை. ''நீ வேண்டுமானால் முன்னால் போ! நான் கிழவரை மூர்ச்சை தெளிய வைத்துவிட்டு வருகிறேன்'' என்றான்.

''இந்த ரூபாய், பெட்டி எல்லாத்தையும் நான் எடுத்துக்கொண்டு போறேன். நீ அப்புறமா வந்தால், ஹைக்கோர்ட்டுக்குள்ளே முதல் வாசல்லே நான் இருப்பேன்; அங்கே வந்துடு'' என்றான் ஷங்கங்.

''சரி; போ!'' என்றான் சீனன்.

அப்புறம் என்ன தோன்றிற்றோ என்னவோ, ''இந்தப் பெட்டியை நீ வரும்போது கொண்டுவா. நான் இந்த ரூபாயை மட்டும் கொண்டு போறேன். இந்தப் பணம் இருந்தால் நாம ஒரு பயகிட்டே போய் கைகட்டி நிக்க வேண்டியதில்லை, நாப்பது ரூபாய் இருக்கு. -



ஆளுக்கு இருபது ரூபாய் இருந்தால் சொந்தமாகவே தட்டுச் சாமான் வாங்கி விக்கலாம். நான் போகட்டுமா?'' என்ருன் ஷங்கங்.

''சரி, போ!'' என்ருன் சீனன்.

எப்படித்தான் இவ்வளவு தைரியமாக, இவ்வளவு உறுதியாக அவனுக்குச் சொல்ல வந்ததோ தெரியாது. அதைத்தான் அதிருஷ்டம் என்று சொல்லவேண்டும்!

ஷங்கங் வந்த வழியாகவே கஷ்டப்பட்டு இறங்கி, நிலவிலே புள்ளிபோல மறைந்து போனுன். சீனன் மட்டும் என்ன கஷ்டம் வந்தாலும், என்ன ஆபத்து நேர்ந்தாலும் அந்தக் கிழவரை அந்த நிலையில் தனியே விட்டுச் செல்வதில்லை என்று உறுதியாகத் தங்கிவிட்டான்.

மூக்கிலே விரலை வைத்து, மூச்சு வருகிறதா என்று அடிக்கடி பார்த்தான். மார்பிலே இருதயம் அடித்துக் கொள்கிறதா என்று அடிக்கடி கையை வைத்துப் பார்த்தான்; பிறகு மெதுவாக, ''ஸார், ஸார்! ஐயா, ஐயா!'' என்று ஆசை ஆவலாதியோடு கூப்பிட்டுப் பார்த்தான்.

ஆனுல் என்ன ஆச்சரியம்! அவன், ''ஐயா, ஐயா!'' என்று கூப்பிட்டவுடனேயே, ''உம்.. உம்..'' என்று எங்கிருந்தோ வருவதுபோல் சத்தம் கேட்டது.

சீனன் திடுக்கிட்டான். அந்தக் கிழவர் செத்துப்போய், அவனுடைய ஆவிதான் பதில் சொல்லுகிறதோ என்று பயம் வந்துவிட்டது. பயத்தோடு அவன் மீண்டும் சற்று உரத்த குரலில், ''ஐயா, ஐயா!'' என்று அந்தக் கிழவருடைய மார்பைப் பிடித்து உலுக்கினுன்.

அதற்கும், ''உம்..உம்'' என்று பதில் வந்தது.

சீனன் அந்தக் கிழவர் முகத்தை உற்றுப் பார்த்தான். நிலவிலே

அந்தக் கிழவருடைய கண் விழிகள் மெல்லத் திறந்திருப்பது தெரிந்தது. சீனனுக்கு அந்தக் காட்சி இன்னும் பயத்தை அதிகரிக்கச் செய்தது.

''உயிரோடுதான் இருக்கீங்களா?'' என்று தன்னை மறந்து கேட்டான் சீனன்.

''ஆமாம்'' என்று கிழவருடைய உதடுகள் அசைந்தன.

''நிசமாகவா?''

''ஆமாம், தம்பி!''

சீனனுடைய மன நிலையை வர்ணிக்க முடியவில்லை. பயம், திகைப்பு, அதிர்ச்சி, ஆச்சரியம், நடுக்கம், உதறல், பிரமிப்பு, படபடப்பு - எல்லாம் ஒரே சமயத்தில் ஒருவனுக்கு உண்டானால், அதை எப்படி வர்ணிப்பது? சீனனுக்கு அவ்வளவும் இருந்தன. அவன் என்னவோ தைரியமாய், ஷங்கங்கிடம் அப்புறம் வருவதாகச் சொல்லிவிட்டானே தவிர, இப்போது உடனே குதித்து எழுந்து ஓடிவிடலாமா என்று தோன்றியது. ஆனால் கிழவருடைய கை அவனுடைய கையை மெல்லப் பிடித்துக்கொண்டது. அதனால் அவனால் நினைத்ததை நினைத்தபடி செய்ய முடியவில்லை. அவனுக்கு எதனாலோ அழுகையே முட்டிக்கொண்டு வரும் போலிருந்தது.

''பயப்படாதே, தம்பி!'' என்று கிழவர் மிகவும் பலவீனமான குரலில், கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோலக் கூறினார்.

''இல்லே ஐயா, தெரியாமல்.. தெரியாமல்..செய்திட்டேன்.. ஐயா!'' என்று சீனன் அழுகை தொண்டையை அடைக்க, உளறுவதுபோல் கூறினான்.

கிழவர் விருட்டென்று எழுந்து உட்கார்ந்துவிட்டார். சீனன் நடுநடுங்கிப் போய் விலகி உட்கார்ந்தான். கைப்பிடி மட்டும் கிழவன் கையிலேயே இருந்தது. இல்லாவிட்டால், காற்றோடு காற்றாகச் சிட்டாகப் பறந்து போயிருப்பான்.

''பயப்படாதே..தம்பி! பயப்படாதே..நான் எல்லாம் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன்.. பணம் போனால் போகட்டும்.. இதோ பாத்தியா..இன்னும் வேண்டிய பணம் இருக்கு..'' என்று நிஜார்ப் பையில் கையைவிட்டு, ஒரு கற்றை நோட்டை எடுத்துக் காட்டினார் கிழவர். சீனன் விழித்த கண்ணை இமைக்காமல் உட்கார்ந்திருந்தான். கிழவர் மீண்டும், ''என்னாலே பேச முடியலியே தவிர, நான் எல்லாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். நீ மட்டும் தைரியமாய் இருந்தியே- அதுவே போதும். உன் இரக்கத்துக்கு ஆண்டவன் வெகுமதிகள் கொடுப்பார்..பயப்படாதே!'' என்று தேவதூதனைப்போல, கொச்சையான மொழியில் நிறுத்தி நிறுத்திப் பேசினார்.

சீனனுக்குக் கொஞ்சம் தைரியமும் நம்பிக்கையும் ஏற்பட்டன.

''என் உயிரைக் காப்பாத்தணும் என்று நீங்கள் ஓடி வந்தீர்களே- உங்களுடைய நல்ல சுபாவத்தை மெச்சுகிறேன். மெதுவாக இரண்டு பேருமாகத் தூக்கி என்னைக் கரை சேர்த்தீர்களே, அது போதும். நீங்கள் மட்டும் வராமல் இருந்திருந்தால், எனக்கு நினைவும் வந்திருக்காது; பாறைகளுக் கிடையில் அகப்பட்டுக்கொண்டு அப்படியே வாயைப் பிளந்து உயிரை விட்டிருப்பேன்..அதனால் பயப்படாதே..சந்தோஷப்படு! நீ யாராக இருந்தாலும் இனி நீ என் சொந்த மகன், பேரன் மாதிரி..எனக்கு மறுபடி உயிரைக் கொடுத்த உனக்கு, என் உயிரையே வேண்டுமானாலும் கொடுப்பேன்..'' என்று திக்கித் திக்கி, மிகவும் கஷ்டப்பட்டுக் கூறினார் கிழவர்.

சீனன் எல்லாவற்றையும் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்தான். பார்த்தால் சீனக்காரன் மாதிரி இருந்த அந்தக் கிழவர், நம் ஊர்க்காரன் மாதிரி தமிழ் பேசுவது அவனுக்கு வியப்பாக இருந்தது. அவனுடைய பேச்சு நம்பிக்கையை உண்டாக்கிற்று. அவனுடைய குரல் உள்ளத்தைத் தொட்டது; உருக்கமாகவும் உண்மையாகவும் இருந்தது; தன் நினைவு தெரிந்து செய்த ஒரு நல்ல காரியம் இதுதான் என்று அவனுக்குப் படும்படி இருந்தது.

"வா, தம்பி! மெள்ள உன் தோளைப் பிடித்துக்கொண்டு நடக்க முடியுமோ, பார்க்கிறேன். எக்கச் சக்கமாக ஓரத்தில் வந்து மாட்டிக் கொண்டேன். இல்லையோ, அந்தப் பயலின் மூக்கை உடைச்சுப் போட்டிருப்பேன்..ஸ்..ஆ..கால் ஒடிந்து போனாப்பலே வலிக்கிறது.." என்று கிழவர், சீனனுடைய தோளைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்க முயன்றார். இரண்டு மூன்று முறை தடுமாறிவிட்டு, கடைசியாக முயற்சியை விடாமல் எழுந்துவிட்டார்.

"அந்தச் சாவியும் பெட்டியும் உங்கிட்டேதானே இருக்கு?"

"ஆமாம், ஐயா."

"அது போதும்; நட; உன் தோளைப் பிடித்துக்கொண்டு நடக்க முடியுமா பார்க்கறேன்" என்று கிளம்பினர் கிழவர்.

அதற்குப் பிறகு அவர்கள் ரெயில் தண்டவாளத்தின் வழியாக, துறைமுகத்தை விட்டு, ஒருவர் கண்ணிலும் படாமல் வெளியில் வந்து சேர்ந்ததே ஒரு தனிக் கதை. அதையெல்லாம் வளர்த்துவதில் என்ன பயன்? எத்தனை இடத்தில் கிழவர் கீழே விழுந்து எழுந்தார், தெரியுமா? எத்தனை இடத்தில் அவர்கள் ஒருவர் கண்ணிலும் படாமல் வரவேண்டியிருந்தது! கடைசியில் தட்டுத் தடுமாறி, ரெயில்வே லயனை மிகவும் பிரயாசைப்பட்டுக் கடந்து, எதிரே வந்த காவற்காரனுடைய கண்ணில் படாமல் பதுங்கி, எண்ணெய்க் கிடங்கு வழியாக அவர்கள் முதல் பீச்சுத் தெருவுக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது கிட்டத்தட்ட மணி பதினொன்று இருக்கும்.

தெருவிலே மனித சஞ்சாரமே இல்லை. நீல நிற விளக்குகள் மட்டுமே அந்த விசாலமான வீதியில் வெறிச்சென்று தொங்கிக் கொண்டிருந்தன. பீச் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் நாலு ஐந்து ரிக்ஷாக்காரர்கள் வண்டியிலேயே சாய்ந்து உறங்கிக்கொண்டிருந்தார்கள். காலடிச் சத்தம் கேட்டதுமே கண் விழித்தெழுந்து விடுவார்கள் என்று தோன்றியது. பிரம்மாண்டமான கட்டிடங்கள் நிறைந்த அந்த நீண்ட சாலையில் போக்குவரத்தே இல்லாமல் இருப்பது பொருத்தமாக இல்லை.



கிழவரும் சீனனும் ஒருவரை ஒருவர் இறுகப் பற்றிக்கொண்டு சாலைக்கு வந்ததும் ஒரு சைக்கிள் ரிக்‌ஷாக்காரன் ஓடிவந்தான். கிட்டேவந்து பார்த்த பிறகுதான் அவன் பேசாமல் திரும்பிப் போனான். இவ்வளவு கிழிந்த சட்டையும் அழுக்குச் சட்டையும் போட்டுக்கொண் டிருப்பவர்கள் எங்கே ரிக்‌ஷாவில் போகப் போகிறார்கள் என்று அவனுக்கு அலட்சியம்.

ஆனால் தற்செயலாக அந்தப் பக்கமாக வந்த டாக்ஸி ஒன்றை, கிழவர் கைகாட்டி நிறுத்தினார். அவனும் நிறுத்தத் தயங்கிக் கொண்டேதான் நிறுத்தினான்.

கிழவர் மெல்லக் கதவைத் திறந்துகொண்டு, சீனனோடு ஏறி உட்கார்ந்தார். இதுவரையில் காரிலேயே ஏறிப் பார்த்திராத சீனனுக்கு வாய் அடைத்துப் போய் விட்டது. இந்தக் கிழவர் எங்கே போகப் போகிறார் என்பதைக்கூட அவன் தெரிந்து கொள்ளவில்லை. ஒரு கையிலே அந்தச் சிறு பெட்டியையும் சாவியையும் பத்திரமாக வைத்துக்கொண்டு கிழவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான்.

''நேரே மவுண்ட் ரோடு போப்பா!'' என்றார் கிழவர்.

''மவுண்ட்ரோடிலே எங்கே?''

''சைனீஸ் ரெஸ்டாரன்ட்-சைனசு - ரூ!'' என்றார் கிழவர்.

இதைக் கேட்டதும் சீனனுக்கு இன்னும் ஆச்சரியமாக இருந்தது. அத்துடன் கொஞ்சம் உதைப்பாகவும் இருந்தது. பத்திரிகைக் கடைக்கு அன்று மட்டம் போட்டிருந்தான், அல்லவா? அவன் கண்ணில் படும்படியாக இருந்தால் என்ன செய்வது? அதுதான் பயம்.

வண்டி பாரிஸ் கார்னரில் வளைந்து ஹைகோர்ட்டு வழியாக, பிராட்வே, பூக்கடை, பாய்க்கடை, சென்டிரல் என்றெல்லாம் கடந்து, சர்க்கார் மாளிகை வழியாக மவுண்ட் ரோட்டில் நுழைந்தது.

இத்தனை சீக்கிரத்திலே மவுண்ட் ரோடு வந்தது சீனனுக்கு ஆச்சரியமாக இருந்தாலும், மனசுக்குப் பிடிக்கவேயில்லை. டாக்ஸியில் ஏறினது போலவேயில்லையே, அதற்குள்ளே இறங்கவேண்டும் என்றால் யாருக்குத்தான் மனசு வரும்?

வண்டி சர்ரென்று பத்திரிகைக் கடையைக் கடந்து, சைனீஸ் ரெஸ்டாரண்டுக்குள் நுழைந்தது. சீனன் அந்தச் சந்துக்குள் வரும்போதுதான் அதைக் கவனித்தான். கடை திறந்திருந்ததா, மூடியிருந்ததா என்பதை அவன் சரியாகக் கவனிக்கவேயில்லை.

வண்டியை விட்டு இறங்கியதும் கிழவர் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தார். டிரைவர் மீதி இரண்டு ரூபாயை நீட்டிய போது, ''தம்பி, வாங்கிக்க அதை!'' என்று சொல்லிவிட்டு கிழவர் முன்னால் போனார்.

தன்னிடம் கிழவருக்கு இருந்த அன்பையும் நம்பிக்கையையும் கண்டு சீனனுக்குப் பெருமையாக இருந்தது. அவனையும் கிழவரையும் சேர்த்துப் பார்த்த ஹோட்டல் மானேஜர், சிப்பந்திகள் அனைவரும் எழுந்து நின்றார்கள். எல்லாரும் அவர்களை வியப்புடன் பார்ப்பதைக் கண்ட சீனனுக்கு உண்மையில் பெருமையாகத்தான் இருந்தது. ஒரு சிப்பந்தி மிகவும் மரியாதையோடு முன்னால் வந்து சீனனிடம் சாவியை வாங்கிக் கொண்டு ஓர் அறையைத் திறந்து விட்டான்.

விளக்கின் சுவிச்சைப் போட்டதும் சீனனுக்குப் பெரிய பிரமிப்பாக இருந்தது. அத்தனை பெரிய அறையில் அந்தக் கிழவர் மட்டுமே இருந்ததாகத் தோன்றியது. எத்தனை ஆடம்பரமாக இருந்தது அந்த அறை!

கிழவர் உடைகளை மாற்றிக் கொள்வதற்காகத் தம் பீரோவைத் திறந்தார். உடனே 'ஹோ' என்று அலறிக்கொண்டே அவர் தடாலென்று தரையிலே வெட்டிய மரம்போல் சாய்ந்து விழுந்துவிட்டார். அந்தப் பீரோவினுள்ளே அவன் கண்ட காட்சி அவன் தலையைச் சுற்ற வைத்தது. அதனுள்ளே மண்டை ஓடு ஒன்று இருக்கும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை!

(தொடரும்)

குரங்குமலைக் கோவா

லதா

மேலத்தெருவில்தான் ஹெட் மாஸ்டர் சாந்தலிங்கம் பிள்ளையின் வீடு இருந்தது. வீட்டிற்கு முன் ஒரு சிறு தோட்டம்; அந்தத் தோட்டத்தில் ஒரு பிரம்மாண்டமான மாமரம், வானளாவ ஓங்கி நின்றது. அதில் பெரிய, பெரிய மாம்பழங்கள் தங்க நிறத்தோடு பழுத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. யாருடைய கண் திருஷ்டியும் அந்த மரத்தை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஊரெல்லாம் மக்கள் அந்தப் பழங்களைப் பற்றிப் பேசிய வண்ணம் இருந்தார்கள். ஹெட்மாஸ்டர் மனைவி வந்தவர்களுக்கெல்லாம் நிறைய மாம்பழங்கள் கொடுப்பாள். எப்படி இப்பேர்ப்பட்ட மரத்தைப் பயிராக்கினீர்கள் என்று யாரேனும் கேட்டால் அந்த அம்மாள் அது ஒரு பெரிய கதை என்று ஆரம்பித்து இந்தக் கதையைச் சொல்வாள்.

அன்று கோடை விடுமுறை விடும் நாள். பரீட்சை உபாதையெல்லாம் தீர்ந்து, பையன்கள் வரப்போகும் விடுமுறை நாட்களைப்பற்றிப் பரமசந்தோஷமாகப் பேசிக்கொண்

டிருந்தார்கள். ஹெட்மாஸ்டர் அப்பொழுதுதான் ஐந்தாம் வகுப்பில் நுழைந்தார். என்றுமே அவர் கடுமையாக இருந்ததில்லை. பையன்களும் பயம் ஏதும் இல்லாமல் அவருடன் உற்சாகமாகப் பழகுவார்கள். அவர், "டேய் பசங்களா! நாளையிலிருந்து உங்களுக்கு விடுமுறை. அதை நல்லபடியாகக் கழிக்கவேண்டும். நீங்களெல்லாம் மேல் வகுப்புக்குப் போகப் போகிறீர்கள். அதனால் விடுமுறையை வீணாக்காமல் நல்ல புத்தகங்களைப் படித்து மேலும் உங்கள் யோக்கிதையை அதிகமாக்கிக் கொள்ளுங்கள்" என்றார். பையன்கள் எல்லோரும், "அதுக்கென்ன சார், லீவு விட்டவுடனேயே நாங்கள் விளையாட்டையெல்லாம் மறந்து புத்தகமும் கையுமாகத்தான் இருக்கப்போகிறோம்" என்று ஒரு குரலில் சொல்லி, விட்டுக் 'கொல்' என்று சிரித்தார்கள். அந்தச் சமயம் ஒரு பெரியவர் ஒரு பெரிய கூடை நிறைய மாம்பழங்களைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு வந்து, "ஹெட்மாஸ்டர் யார்? எங்கே இருக்கிறார்?" என்று கேட்டார். ஹெட்மாஸ்டர் அவரை உள்ளே வரவழைத்தார். உடனே பெரியவர், "உங்களிடம் இந்த முப்பது மாம்பழத்தையும் மருதவாணம்பிள்ளை கொடுத்துவரச் சொன்னார். குரங்குமலைக் கோவா என்று இந்த மாம்பழத்திற்குப் பெயர். ரொம்ப உயர்ந்த ரகம்" என்று சொல்லி விட்டு விடைபெற்றுக் கொண்டார்.

ஹெட்மாஸ்டர் பையன்களிடம், "இந்த மனுஷன் இதை வீட்டில் கொண்டுவந்து கொடுத்திருக்கக் கூடாதோ! யார் இதை வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பது?" என்று சொன்னார். உடனே சங்கர் முன்னால் வந்து, "நான் தூக்கிப்போய் வீட்டில் கொடுத்து விடுகிறேன், ஸார்" என்றான்.

"நீ ஒருவன் மட்டும் அதைத் தூக்கிச் செல்ல முடியுமா? ரொம்ப கனமாச்சே!" என்றார் ஹெட்மாஸ்டர். அப்பொழுது, "நாங்கள் எல்லோருமே தூக்கிச் செல்கிறோம், ஸார்" என்றார்கள், அந்த வகுப்பு மாணவர்கள். "முப்பது பேரும் எப்படியடா தூக்கிச் செல்வது?" என்று சொல்லி ஹெட்மாஸ்டர் சிரித்தார். "ஆளுக்கு ஒரு பழமாகத் தூக்கிச் செல்கிறோம், ஸார்!" என்றார்கள் பையன்கள்.

"சரி, பேஷான யோசனை!" என்று ஹெட்மாஸ்டர் கூற, பையன்கள் ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டு ஹெட்மாஸ்டர் வீடு நோக்கிச் சென்றார்கள். பாதி தூரம் சென்றபோது பழத்தின் மணம் அவர்கள் மூக்கைத் துளைத்தது. நாக்கில் ஜலம் ஊறியது. மனமோ இடம் கொடுக்கவில்லை. பழமோ பார்க்கப் பார்க்க, 'தின்னு தின்னு' என்று அழைத்தது. என்ன செய்வார்கள், பாவம்! இரண்டொருவர் லேசாகத் தின்ன ஆரம்பித்தார்கள். அவ்வளவுதான்! மற்றப் பையன்களும் சங்கோஜமின்றித் தின்ன ஆரம்பித்தார்கள். அதன் ருசியைப்பற்றி அளவளாவிக் கொண்டே, ரசித்துத் தின்றார்கள். ஹெட்மாஸ்டர் வீடும் வந்தது. அதற்குமுன் இருந்த சிறு தோட்டத்தில் தின்று மிஞ்சிய கொட்டைகளை விட்டெறிய மனம் இல்லாமலே எறிந்தார்கள்.

முப்பது கொட்டைகளும் தோட்டத்தில் விழுந்தன. "டேய், ஓடியாங்கடா! இனிமேல் விடுமுறை கழித்துத்தானே அவர் நம்மைப் பழத்தைப் பற்றிக் கேட்கப் போகிறார்! பார்த்துக் கொள்வோம்" என்று எடுத்தார்கள் ஓட்டம். இது நடந்து பத்து வருஷங்கள் ஆகிவிட்டன. அவர்கள் விட்டெறிந்த முப்பது கொட்டைகளில் ஒரு கொட்டை மட்டும் தப்பி முளைத்தது. பிறகு செடியாகி, மரமாகி இப்படிச் சடை சடையாகக் காய்க்க ஆரம்பித்து, தேனினும் இனிய பழங்களாகப் பழுத்துக் குலுங்குகின்றன. அந்தப் பழங்களின் ருசியை இப்பொழுதுதான் நாங்கள் அறிய முடிந்தது.

இந்தக் கதையைச் சொல்லி, "இந்தாருங்கள், நீங்களும் பத்துப் பழம் எடுத்துச் செல்லுங்கள்" என்று ஹெட்மாஸ்டரின் மனைவி பழங்களை விநியோகம் செய்வாள்.

கர்வ பங்கம்

சித்தார்த்தன்

அக்பர் சக்கரவர்த்திக்கு அன்று மகிழ்ச்சி தாங்கவில்லை. தன் எதிரில் ஸிதாரை மீட்டிய வாறு, இசை லயத்தில் ஈடுபட்டு உள்ளம் உருகப் பாடிக்கொண்டிருக்கும் தான்ஸேனைப் பெருமையுடன் பார்த்தார். தான்ஸேன் அக்பர் பாதுஷாவின் அரசவைப் பாடகன். கேட்பவர்களின் சிந்தையைக் கவர்ந்திழுக்கும் அற்புதமான குரலினிமையும், இசை ஞானமும் பெற்றிருந்த தான்ஸேனின் புகழ் வெளிநாடுகளில்கூட பரவியிருந்ததில் ஆச்சரியமில்லை, அல்லவா?

தான்ஸேனிடம் அக்பர் பாதுஷாவுக்கு அபார மதிப்பு. ராஜ்ய பாரத்தின் விசாரம் சில வேளைகளில் மனத்தைக் கலக்கும்போது தான்ஸேனைப் பாடச் சொல்லி ஆறுதல் பெறுவார். அவன் மனம் மகிழும்படி பரிசுகளை வாரி வாரி வழங்குவார். தேன் உண்ட வண்டு போல் தான்ஸேனின் இசையில் திளைத்துவிட்ட பாதுஷா ஒரு நாள் விசித்திரமான கட்டளை ஒன்றைப் பிறப்பித்தார்.

''தான்ஸேனை விட யார் குரலினிமையும் இசை ஞானமும் பெற்றிருக்கிறார்களோ அவர்கள்தான் ஆக்ரா நகரின் முக்கிய வீதிகளியில் பாடிக்கொண்டு வரலாம். அந்தக் கட்டளையை யாராவது மீறுவார்களேயானால் கடுமையான தண்டனை தரப்படும்'' என்பது தான் அவர் விடுத்த கட்டளையின் சாராம்சம்.

தான்ஸேன் பூரித்துப் போனான். அரசரின் அன்பை அளவிலாது பெற்றிருக்கிறோம் என்ற கர்வம் நாளுக்கு நாள் அவன் மனத்தில் படிந்து வந்தது. மொகலாய சாம்ராஜ்யத்திலேயே தன்னை எதிர்த்துப் போட்டியிட எவரும் இல்லை என்ற அகந்தை அந்த இசைக் கலைஞனின் உள்ளத்தில் மெள்ளப் படிந்துவிட்டது.

ஒரு நாள் காலை பத்து நாழிகையிருக்கும், பத்துப் பேர்கள் அடங்கிய சாதுக்கள் கூட்டமொன்று இறைவனின் திருநாமத்தையும், எல்லையற்றப் பேரருளையும் பற்றிப் பாடியவாறு ஆக்ரா நகர வீதியில் வந்துகொண்டிருந்தது. என்றுமே நடைபெற்றிராத அந்த அதிசய நிகழ்ச்சியைக் கண்டு அரண்மனைச் சேவகர்கள் திடுக்கிட்டுத் திகைத்தனர். அரசரின் கட்டளையை மீறி அவர்கள் பாடக் கூடாதென்று ஓடித் தடை செய்தனர். அந்தச் சாதுக்களைப் பார்த்து அரண்மனைச் சேவகர்களில் ஒருவன் கேட்டான்:

''என்ன துணிச்சலையா உங்களுக்கு, ஆக்ரா நகர வீதியில் பாடக் கூடாதென்ற அக்பர் பாதுஷாவின் கட்டளையை மீற? உங்களுக்கு என்ன நெஞ்சழுத்தம்!''

சேவகனின் பேச்சைக் கேட்டுத் திகைத்து நின்றனர் சாதுக்கள். அவர்களில் ஒருவர் கேட்டார். ''ஏனப்பா, ஆண்டவனைப்பற்றிப் பாடுவதைக் கூடவா அக்பர் பாதுஷா ஆட்சேபிக்கிறார்?''

''சரி, சரி.. உங்களுடன் வீண் வம்பு பேசிக்கொண்டிருக்க எங்களுக்கு நேரமில்லை. எல்லாவற்றையும் பாதுஷாவையே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!'' என்று எரிச்சலுடன் கூறிவிட்டு அவர்களைப் பாதுஷாவிடம் அழைத்துச் சென்றான் அரண்மனைச் சேவகன்.

அக்பர் பாதுஷாவின் கண்களில் அனல் பறந்தது. ''எல்லா வகையிலும் இந்தத் தான்ஸேனைவிடத் திறமைசாலிகள்தான், இந்த ஆக்ரா நகரின் வீதிகளில் பாடிக்கொண்டு செல்ல முடியும் என்ற நம் கட்டளையைப்பற்றித் தெரியுமல்லவா?'' என்று கர்ஜித்தார் சக்கரவர்த்தி. சாதுக்கள் நடுங்

கினர். பாதுஷாவுடன் இருந்த தான்ஸேன், பெருமையுடன் தலை நிமிர்ந்து, சாதுக்களைப் பார்த்து அவர்களின் இசை அறிவைச் சோதிக்கும் முறையில் பல கேள்விகள் கேட்டான். பாடுவது அந்தச் சாதுக்களின் தொழிலல்ல. தான்ஸேனின் கேள்விகளுக்குப் பதில் கூற முடியாது திணறினர். முடிவாக, அவர்களில் ஒருவனைத் தவிர்த்து அனைவருக்கும் ஆயுள் தண்டனை விதித்திருப்பதாகத் தீர்ப்பளித்தார் பாதுஷா.

சக்கரவர்த்தியின் தண்டனையிலிருந்து தப்பிய பாக்கியசாலி யார் தெரியுமா? பத்து வயதுச் சிறுவன்தான். பெயர் பாய்ஜு.

எல்லையற்ற சோகத்தோடு தன்னந்தனியாகத் தன் குடிசைக்குத் திரும்பிய பாய்ஜு நெடுநேரம் அழுதான். யாரோ அவன் தோள்களைத் தொடுவதுபோல் இருந்தது. திரும்பினான். அருள் கனியும் முகத்தில் வெண்ணிறத் தாடியோடு ஒரு ஞானி அமர்ந்திருந்தார்.

அவன் அழுவதற்குக் காரணம் கேட்டபோது, பாதுஷாவின் சபையில் நடந்ததை விவரித்து, அத்துடன், 'என்றாகிலும் ஒரு நாள் தான்ஸேனை இசைப் போட்டியில் வென்று சிறையில் வாடும் தன் தந்தையையும் உறவினர்களையும் விடுவிக்க வேண்டும்' என்ற தன் ஆசையையும் வெளியிட்டான்.

''ஆண்டவன் அருள் புரிவான். அஞ்சாதே, குழந்தாய்!'' என்று தைரியம் கூறி யமுனா நதிக் கரையிலுள்ள தன் குடிசைக்குப் பாய்ஜுவை அழைத்துச் சென்றார் ஞானி. பிறகு, அநுதினமும் இசைக் கலையைப்பற்றித் தாம் அறிந்தவற்றையெல்லாம் அவனுக்குப் போதிக்கத் தொடங்கினார் அவர். பத்தாண்டுகள் பறந்தன. பாய்ஜு இணையற்ற இசைக் கலைஞனாகிவிட்டான். எல்லாம் ஞானியின் அருள்.

பாய்ஜு தன் மதுரமான குரலெடுத்து இசை மழை பொழியத் தொடங்கிவிட்டால் பட்டமரத்தில் பசுமை காணும். பட்சி ஜாலங்கள் பரவச மடையும்; மயில்கள் மகிழ்ச்சியால் தோகை விரித்தாடும். கல்லும் கசிந்துருகும்.

பயிற்சிக் காலம் முடிந்தது. குருதேவரின் காலில் விழுந்து வணங்கினான் பாய்ஜு.

''பாய்ஜு..போய் வா..தான்ஸேனை முறியடி. வெற்றியுடன் திரும்பி வா. இசை என்பது பிறரை மகிழ்விக்கத்தான், துன்புறுத்த அல்ல. இதை என்றும் மறந்துவிடாதே!'' என்று ஆசிர்வதித்து அனுப்பினார் ஞானி.

ஆக்ரா நகரத்தின் அகன்ற தெருக்களில் ஸிதாரை மீட்டியவாறே கம்பீரமாகப் பாடிக்கொண்டு சென்றான் பாய்ஜு. மகுடி ஓசையைக் கேட்டு மயங்கும் நாகங்களைப்போல மக்கள் கூட்டம் அவனைப் பின் தொடர்ந்தது. அரண்மனைச் சேவகர்களும் தங்கள் கடமையை மறந்து பாய்ஜுவின் இசைக்கு வசமாயினர். பாடிக்கொண்டே பாய்ஜு அரண்மனையை நெருங்கிக்கொண்டிருந்தான். திடீரென சுய உணர்வு பெற்ற சேவகர்கள் அவனைக் கைது செய்து பாதுஷாவின் முன் கொண்டுபோய் நிறுத்தினர். அக்பருக்கு ஒரே ஆச்சரியம்!

''இளைஞனே யார் நீ?'' என்று கேட்டார் பாதுஷா.

''நான் ஒரு பாடகன்!'' என்று அடக்கமாகப் பதில் சொன்னான் பாய்ஜு.

''என் கட்டளையைப்பற்றித் தெரியுமல்லவா உனக்கு..?''

''தெரியும்.''

''தெரிந்துமா என் கட்டளையை மீறினாய்? கட்டளையை மீறி நடப்பவர்களுக்கு என்ன தண்டனை விதிக்கப்படும் தெரியுமா?''

''மகாராஜா, இந்தப் பரந்த உலகைப் படைத்த ஆண்டவன் இசையில் வல்லவனும். அவன் உங்கள் தான்ஸேனை மட்டும் படைக்கவில்லை. தான்ஸேனைவிட வேறு இசை நிபுணர்களையும் அவன் படைத்திருக்கலாம்!'' என்றான் பாய்ஜு பணிவாக.

தான்ஸேனின் இசை ஞானத்தை எதிர்த்துப் பேசும் அளவுக்குத் துணிவு கொண்ட பாய்ஜுவைக் கண்டு பாதுஷாவின் ராஜ



சபையே திகைத்துவிட்டது. தான் ஸேனின் உள்ளத்தில் கடல்போல் ஆத்திரம் குமுறியது. வேல்பட்ட வேங்கைபோல் அவன் சீறினன்,

''பாவம்! இளைஞன் என்ன பேசுகிறோம் என்பதைப் புரிந்து கொள்ளாமலேயே பேசுகிறன். நாளை நடக்கும் போட்டியில் அவனுக்குத் தகுந்த பாடம் கற்பிக்கிறேன்!'' என்றன் தான்ஸேன்.

மறுநாள் போட்டி. போட்டியில் ஜயிப்பவன் தோல்வியடைபவனுக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் விதிக்கலாம் என்பது நிபந்தனை.

மறுநாள் பாதுஷாவின் தர்பாரில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. தான்ஸேனின் அற்புதத் திறமையைப் பற்றி முன்பே அவர்களுக்குத் தெரியும். பூத்தப் புதுத் தாமரையைப் போல் விளங்கும் அந்த இளைஞனின் துணிவு மக்களுக்கு வியப்பைத் தந்தது. அழகாக அலங்கரிக்கப்பட்ட மேடைமீது கையில் ஸிதாருடன் தான்ஸேனும் பாய்ஜூவும் அமர்ந்திருந்தனர். பாதுஷா தலை யசைத்தார். போட்டி தொடங்கியது. பாய்ஜூ முதலில் பாடத் தொடங்கினன். பரவசமடைந்த பாதுஷா நிமிர்ந்து உட்கார்ந்தார். லய சுத்தியுடன் அடுக்கடுக்காக, குழைந்தும் நெளிந்தும் நளினமாகப் புறப்பட்ட பாய்ஜூவின் தெய்விக நாதப் பெருக்கு தர்பாரில் இருந்தோரைப் பேசாச் சிலைகளாக்கி வைத்தது. ஏன், அகந்தை கொண்ட தான் ஸேனைக்கூட அந்த அற்புத இசை சில நிமிட நேரம் மயக்கிவிட்டது. அப்பொழுதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது.

பாதுஷாவின் பூங்காவில் பச்சைப் புற்களை ருசி பார்த்துக் கொண்டிருந்த புள்ளிமான்கள்

இரண்டும், பாய்ஜுவின் இசையால் இழுக்கப்பட்டு தர்பாருக்குள் நுழைந்தன. இசை முடியப் போகும் நேரம். அந்த அழகான புள்ளிமான் ஒன்றின் கழுத்தில் பூமாலையை அணிவித்துவிட்டுப் பாடுவதை நிறுத்தினான் பாய்ஜு. மறுகணம் புள்ளிமான்கள் பூங்காவை நோக்கிப் பாய்ந்தோடின. செயலற்று அமர்ந்திருக்கும் தான்ஸேனைப் பார்த்தான் பாய்ஜு.

''இசையரசே! அதோ என் மாலையைக் கவர்ந்துகொண்டு ஓடும் அந்தப் புள்ளிமானை இசை பாடி உம்மால் அழைக்க முடியுமானால் நான் உம்முடைய ஆயுள் அடிமை!'' என்றான் அலட்சியமாக.

தான்ஸேனுக்குத் தன் திறமையின் அளவு தெரியும். ஒருகணம் தயங்கினான். பிறகு அவனுக்கு இயல்பான அகங்காரம் தலை தூக்கியது. பாடத் தொடங்கினான். நேரம் ஓடியதே தவிர, புள்ளிமான் என்ன, ஒரு புழுக்கூட அங்கே பிரசன்னமாகவில்லை. தன் திறமையனைத்தும் ஒன்று திரட்டிப் பாடினான். பாய்ஜுவின் தெய்விகக் கானம் ஒலித்த தர்பாரில் தான்ஸேனின் இசை வெறும் வரட்டுக் கூச்சல்போல் ஒலித்தது. பாய்ஜுவின் அமர கீதத்தோடு ஒப்பிடும்போது தான்ஸேனின் பாடல்கள் மிகமிகச் சாதாரணமானதே என்ற எண்ணமே மக்கள் மனத்தில் எழுந்தது.

கடைசியில் பாடிப் பாடி ஓய்ந்து களைத்துப் போனான் தான்ஸேன். ''இளைஞனே, புள்ளி மான்கள் உன் கீதத்தைக் கேட்டு இங்கே வரவில்லை. ஏதோ சந்தர்ப்ப வசத்தால் இங்கே தலை நீட்டிவிட்டன. முடியுமானால் மீண்டும் இசை பாடி அழை!'' என்றான் தான்ஸேன் வீண் ஜம்பத்துடன்.

பாய்ஜு ஸிதாரை மீட்டினான். பாடினான். முதலடி முடிவதற்கு முன்பே துள்ளிக் குதித்தவாறு உள்ளே வந்தது புள்ளிமான். அதன் கழுத்திலிருந்த மாலையைக் கழற்றித் தன் ஸிதாருக்குச் சூட்டினான் பாய்ஜு. தர்பாரில் எழுந்த மக்களின் கரகோஷ ஒலி ஓய நீண்ட நேரமாகியது.

தான்ஸேன் தலை குனிந்தான். அவன் அகங்காரம் அழிந்தது. பணிவுடன் பாய்ஜுவைப் பார்த்துப் பகர்ந்தான்.

''பாய்ஜு நீங்களே இனி என் எஜமானன். நான் உங்கள் அடிமை!''

பாய்ஜுவின், விருப்பம் வெற்றி பெற்றது; கோரிக்கை நிறைவேறிவிட்டது. தான்ஸேனின் 'கர்வபங்கம்' தடையில்லாமல் நடந்தேறிவிட்டது. ஆனால் பெற்ற வெற்றியால் பூரித்துப்போய் நிதானத்தை இழந்துவிடவில்லை பாய்ஜு. 'இறையுருவமான இசை பிறரை மகிழ்விக்கத்தான்; துன்புறுத்த அல்ல!' என்ற ஞானியின் பொன்மொழிகள் அவன் மனத்துள் எதிரொலி செய்தன.

''தான்ஸேன் ஓர் உயர்ந்த இசைக் கலைஞர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இருந்தும் அகங்காரத்தால் அவர் சிறப்பு சீர்குலைந்தது. மகாராஜா, என் இசை உங்களை மகிழ்வித்தது உண்மையானால் கடந்த பத்து ஆண்டுகளாகச் சிறையில் மெலிந்து வாடும் என் தந்தையையும் உறவினர்களையும் உடனே விடுவிக்க உத்தரவிடுங்கள்!'' என்றான் பாய்ஜு பணிவாக.

அக்பரின் மனம் பாகாய்க் கரைந்தது. சிறையிலிருக்கும் அனைவரையும் விடுவிக்கும்படி கட்டளை பிறப்பித்தது மல்லாமல், ஆக்ரா நகர வீதிகளில் யாரும் பாடக்கூடாது என்ற பழைய உத்தரவையும் ரத்து செய்தார்.

பாய்ஜு பாதுஷாவின் அரசவைப் பாடகனாகப் பதவி ஏற்றான். தான்ஸேன் யமுனா நதிக்கரையை நோக்கிப் போய்விட்டான். பாய்ஜு எல்லோரிடமும் அன்பிக்குரியவனாக அகந்தை இன்றி வாழ்ந்து வந்தான்.

யானைக்குட்டி

விஜயா

சமீபத்தில் மைசூர்ப் பக்கத்தில் உள்ள காகன்கோட்டை என்னும் மூங்கில் காட்டில் நடந்த யானைப் பிடிப்பு (கெட்டா) பற்றிக் கேள்விப்பட்டீர்களா? இது உங்களுக்கு வேடிக்கைதான். ஆனால் எங்களுக்கு எப்படி இருந்ததென்று யார் யோசிக்கப் போகிறார்கள்?

எங்கள் ஜாதியில் எப்போதும் ஒற்றுமை அதிகம். எங்கள் கூட்டத் தலைவர் பெரியவர். அவரைப் பின்பற்றி, அவர் எங்கே சென்றாலும் செல்வோம். அவர் சொல்படி தவறாமல் நடப்போம். அவரும் எங்கள் க்ஷேமத்திலேயே தான் குறியாக இருப்பார்.

காட்டில் ஏகாந்தமாகத் திரிந்து வேண்டிய மட்டும் இலை, மூங்கில் குருத்து முதலியவைகளைத் தின்று பக்கத்தில் ஓடும் கபிலா நதியில் ஸ்நானம் செய்வோம். குஷி வந்தால் நீரில் மணிக் கணக்காக ஒருவர்மேல் ஒருவர் தண்ணீரை வாரி இறைத்து விளையாடுவோம். கவலையென்பது என்ன, பயம் என்பது என்ன என்று தெரியாமல் நாங்கள் வாழ்ந்து வந்தோம்.

ஒரு நாள் எங்கள் காட்டிற்கு எதிரில் உள்ள காட்டில் அதாவது- நதியின் எதிர்ப்புறமுள்ள காட்டில் ஏகச் சத்தம் கேட்டது. நிறைய ஆட்கள் கையில் மண்வெட்டிகள், கூடைகள் எல்லாம் கொண்டுவந்து அந்தக் காட்டைச் சுற்றி ஆழமான பள்ளம் வெட்டினர். எங்களுக்கு இதெல்லாம் எதற்கு என்றே புரியவில்லை. நாங்கள் அதைப்பற்றிக் கவலை கொள்ளவுமில்லை. 'எதிர்க் காட்டில் நடப்பதுபற்றி நமக்கு என்ன' என்று இருந்துவிட்டோம். நாங்கள் எப்போதும் போலவே குதூகலமாகவே இருந்தோம்.

பின், கொஞ்ச நாள் ஆனதும் அந்தக் காட்டில் இரவு பகலாக வேலை நடந்தது. வெளிச்சத்துக்காகக் கட்டைகளை எரியவிட்டுக் கொண்டு வேலை செய்தார்கள். சுற்றிலும் வேலி போட்டார்கள். பள்ளமோ, ஆழமும் அகலமுமாக இருந்தது.

பிறகு திடீரென்று ஒரு நாள் எங்கள் காடு அமர்க்களப் பட்டது! தாரை தப்பட்டைச் சத்தமும் மூங்கிலைப் பிளந்து ''டப் டப்'' என்று அடிக்கும் சத்தமும் காதுகளைத் துளைத்தன! எங்களுக்கெல்லாம் ஒரே திகில். நடுங்கினோம். சத்தம் காட்டைப் பிளந்தது. தலைவர் முகத்தில் கவலைக்குறி படர்ந்தது. எங்களையெல்லாம் பத்திரமாக நடுக் காட்டில் அழைத்துச் சேர்த்தார். ஆனால் குழந்தைகளான நாங்கள் தலையை நீட்டி நீட்டி வெளியே பார்த்தோம்.

அளந்து பேசு!

ஒருவன்: எப்பொழுது பார்த்தாலும் கையிலே ஒரு ஸ்கேல் வைத்துக்கொண்டிருக்கியே; ஏன்?

மற்ருெருவன்: பேசும்போது வார்த்தைகளை அளந்து பேச வேண்டாமா? அதற்குத்தான்!

—பெ. கலாசாமி, தூத்துக்குடி.

தலைவருக்குக் கோபம் தாங்கவில்லை. ''சூ'' என்று சீறிக்கொண்டே எங்களைத் துதிக்கையால் பின்னுல் தள்ளினுர்.

நாங்கள் ஒதுங்க ஒதுங்கச் சத்தம் எங்களருகிலேயே வந்தது. நாங்களும் நகர்ந்து நகர்ந்து நதிக்கரைக்கே வந்து விட்டோம். பிறகும் அந்தச் சத்தம் எங்களை அணுகவே தலைவர் ஒரு முடிவுக்கு வந்தார். எங்களை மெள்ள நதியில் இறக்கி நடத்தி எதிர்க்கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தார். இதைத்தான் நீங்கள் 'ரிவர் டிரைவ்' என்கிறீர்கள்.

எதிர்க்கரை ஏறியபின்னும் எங்களைச் சில மனிதர்கள் (எங்கள் ஜாதியினரை அடிமைப்படுத்திப் பழக்கி யிருந்தார்கள் போலும்) எங்கள் ஜாதியினரையே உதவிக்கு வைத்துக்கொண்டு சப்தம் செய்தவாறே பின்தொடர்ந்தனர். காட்டைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டிருக்கவே நாங்கள் இங்குமங்கும் ஓடினுேம். கடைசியில் ஒரு வழியிருந்ததைக் கண்டு அதனுள் புகுந்து காட்டுக்குள்ளே ஓடி விட்டோம்.

நாங்கள் எல்லோரும் தப்பி விட்டதாகவே நினைத்தோம். ஆனுல் எங்கள் பின்னுல் நாங்கள் வந்த வழியும் அடைபட்டபின் தான் நாங்கள் சிறைப்பட்டு விட்டோம் என்று தெரிந்தது.

எங்கள் ஜாதியினரை, எங்களை காட்டிக் கொடுக்கப் பழக்கியிருக்கிருர்களே என்று ரொம்ப வருத்தப்பட்டோம். எங்கள் ஒருவர் முகத்திலாவது ஈ ஆடவில்லை. என் தாய் என்னை கட்டிக் கொண்டாள். அது போலவே என் சிநேகிதர்களையும் அவர்களின் தாய்மார்கள் அணைத்துக்கொண்டார்கள். நாங்கள் இங்கும் அங்கும் ஒன்றும் புரியாமல் பயந்து ஓடுவதைப் பல பேர்கள் வேடிக்கை பார்த்தார்கள். இப்படி வேடிக்கை பார்க்கப் பல நாடுகளிலிருந்து ஜனங்கள் வந்திருந்தார்கள் என்று கேள்வி. சில பேர்கள் காமிரா கொண்டுவந்து எங்களைப் போட்டோ எடுத்தார்கள்.

எதிரிகளுடன் பழகியிருந்த எங்கள் ஜாதியினரே தங்கள்மீது மனிதர்களை ஏற்றிக்கொண்டு எங்களை நாலாபுறத்திலிருந்தும் பலவிதமான சத்தம் செய்து துரத்தினர். எங்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சுதந்தரமாக வாழும் எங்களை ஏன் இப்படி வதைக்கிருர்கள் என்று ஆத்திரமாக வந்தது. எனக்கு அழுகை அழுகையாய் வந்தது.

எங்கள் தலைவர் எங்களைச் சுற்றிச் சுற்றி வந்தார். அவரும் பொறுத்துப் பொறுத்துத்தான் பார்த்தார். விடாப்பிடியாக அவர்கள் துரத்தவே இவர் கோபம் கொண்டார். பெரிய மண் உருண்டைகளையும் கற்களையும் எடுத்துச் சுழற்றி வீசினுர். அவ்வளவுதான். எதிரிகள் பயந்து பின்னுக்கு ஓடினர். எங்களுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அது மட்டுமா? தலைவர் வாரி இறைத்த மண் இதுவரை எங்களை வேடிக்கை பார்த்தவர்களின் கண்களிலும்

மூக்குகளிலும் புகுந்துகொண்டது. எனக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

''என்ன சிரிப்பு, தாடி பற்றி எரியும்போது?'' என்று அம்மா கோபித்துக்கொண்டு என்னை இழுத்தபின் தான் பேசாமலிருந்தேன்.

இரண்டு நாள் முழுதும் இப்படியே எதிரிகளுடன் போராடினோம். மூன்ருவது நாள் சோர்வடைந்துவிட்டோம். இதுதான் சமயமென்று எங்கள் ஜாதி எதிரிகள் முன்னேறி வந்து எங்களை முன்னும் பின்னுமாகத் தள்ளித் தள்ளி முட்டினார்கள். உள்ளம் குமுற, கைகால்கள் பதற அவர்களை மனமாரச் சபித்துக்கொண்டே முன் சென்ருேம்.

அவர்களுக்கும் தங்கள் ஜாதியினரைத் தாங்களே காட்டிக் கொடுக்கிருேமே என்று கஷ்டமோ என்னவோ, பெருமூச்சு விட்டுக்கொண்டேதான் இருந்தார்கள். எங்களைத் தள்ளிக்கொண்டே வந்தவர்கள் எங்களை ஒரு சிறு சந்து மாதிரியான இடத்துக்குத் தள்ளினார்கள். நடுவில் எங்களில் ஒவ்வொருவராக போகக்கூடிய அளவு தான் வழி இருந்தது. முரண்டினால் இருபக்கமும் தலையில் அழுத்தமான மரங்கள் இடிக்கும். விதியே என்று ஒருவர் பின் ஒருவராகச் சென்ருேம். உள்ளே சற்று விஸ்தாரமாக இருந்தது. நாங்கள் உள்ளே வந்ததுதான் தாமதம். பின்னால் ஒரு பெரிய கதவால் வழியை அடைத்துவிட்டார்கள்.

உள்ளேயும் எங்கள் ஜாதி எதிரிகள் பல பேர் இருந்தனர். அவர்கள் மேல் ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். எங்கள் ஜாதி எதிரிகளின் உதவியாலேயே எங்களைப் பருமனான கயிறுகளினால் வரிந்து கட்டினார்கள். முரண்டினால் ஈட்டியால்குத்தி அடித்தார்கள். நாங்கள் சுதந்தரத்திற்குப் போராடினால் கிடைப்பது அதுதான். கடைசியில் பெரியவர்களை எல்லாம் கட்டிவிட்டார்கள். எல்லோர் கண்களிலும் கண்ணீர் வழிந்தது. இனி அழுது என்ன பயன்? எங்கள் துக்கத்தை யார் லட்சியம் செய்தார்கள்?

என்னைப்போன்ற சிறுவர்களைக் கட்டவில்லை. எங்கள் தாய்மார்களை விட்டு நாங்கள் எங்கேயும்



போகமாட்டோம் என்ற தைரியம் அவர்களுக்கு. எல்லோரும் அலறினோம், அழுதோம். கேட்பாரே இல்லை. எங்களைச் சுற்றி அங்கேயும் ஜனங்கள் வேடிக்கை பார்த்தனர். எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஓடி ஓடி தும்பிக்கையால் கயிறுகளைப் பலம் கொண்டமட்டும் இழுத்தேன். ஆனால் என் பலத்துக்கெல்லாம் அசையுமா அது?

ஜனங்கள், நான் இப்படி செய்வதைப் பார்த்து, 'தமாஷ்' என்று சிரித்தார்கள். அவர்களுக்கு எப்படித் தெரியும் எங்கள் நெஞ்சுக் குமுறல்?

''அடேயப்பா, இந்தத் தடவை 'கெட்டா' நல்ல வேட்டைதான். ஐம்பது அறுபது யானைகள் பிடிபட்டுவிட்டனவே!'' என்று ஜனங்கள் சந்தோஷமாகப் பேசிக்கொண்டார்கள். என் வயிறு பற்றி எரிந்தது. எனக்கு மட்டும் மூன்றாவது கண் இருந்திருந்தால் அவர்களைச் சுட்டுச் சாம்பலாக்கி யிருப்பேன்.

எங்கள் தலைவரும் பிடிபட்டு விட்டார் என்று கேள்விப்பட்டதும் நாங்கள் பட்ட துயரத்துக்கு அளவே இல்லை. ஆனால் அவரை யாராலும், எப்பாடு பட்டும் கட்ட முடியவில்லையாம். எப்படி முடியும் என்று கேட்கிறேன்? அவர் பலம் என்ன, வீரம் என்ன? அவரைக் கட்ட இவர்கள் யாரால் முடியும்? ஹூம் எனக்குப் பெருமை தாங்கவில்லை. பிறகு அவரை விட்டு விட்டார்கள். ஆனால் சில நாட்களுக்கெல்லாம் அவர் ஏக்கத்திலேயே மாண்டுவிட்டார் என்று தெரியவந்தது. பாவம்! எவ்வளவு பெரிய வீரர் மறைந்துவிட்டார்!

நாங்கள் பிடிபட்டது பட்டோம், இனி தெய்வம் விட்டவழி என்று படிய ஆரம்பித்தோம். சிறியவர்களான நாங்கள் எங்களைப் பழக்க வந்தவர்களிடம் சீக்கிரம் பழகி விட்டோம். அவர்கள் எங்களை ரொம்ப ஆசையோடு பார்த்துக் கொண்டு நிறைய தித்திப்பு வகைகளையும் அவ்வப்போது கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். ஆனால் பெரியவர்கள் அவ்வளவு சீக்கிரம் பழகவில்லை. அதனால் அவர்களை கட்டிப்போட்டு வேண்டுமென்றே கால்களில் வெட்டுக்காயம் செய்து அதில் பாதாமி எண்ணெயைத் தடவினார்கள். எரிச்சல் தாங்காது அவர்கள் கூப்பாடு போட்டார்கள். இந்தக் கண்ணருவியைப் பார்க்கவே எங்களுக்குச் சகிக்கவில்லை. இப்படியாக அவர்களைத் துன்பப்படுத்தியே வழிக்குக் கொண்டுவந்தனர்.

பிறகு எல்லோரையும் பழக்கி ஊருக்குள் அழைத்து வந்தனர். 'கரோடி' என்பது யானைகளைக் கட்டுமிடம். அங்கே எங்களைக் கட்டினார்கள். பல பேர் வந்து பார்த்தனர். எவ்வளவோ பேர்கள் எங்களை விலை பேசினர். அப்போதுதான் எங்களுக்குப் புரிந்தது. பணத்துக்காக நம்மை எவ்வளவு துன்பப்படுத்தி இங்கே அழைத்து வந்தனர் என்று. எங்களுக்கு உள்ளூர ஒரே ஏக்கம். இனி என்ன செய்வது?

வெளியூர்களிலிருந்து எங்களுக்கு ஆர்டர்கள் வந்தன. எங்களில் பலரை பல இடங்களுக்கு அனுப்பினார்கள்.

ஏரோப்பிளேனிலும், கப்பலிலும், ரெயிலிலுமாகப் பல இடங்களில் போய்ச் சேர்ந்தார்கள் என் கூட இருந்தவர்கள். ஆனால் யாருக்கு வேண்டும் இதெல்லாம்? இனிப் பழையபடி நம் இஷ்டம் போல் எங்கே இருக்கமுடியும்?

ஆனால் நான் மட்டும் மைசூரிலேயேதான் இருக்கிறேன். பட்டத்து யானைக்கு வேண்டிய சகல லக்ஷணங்களும் எனக்கு இருக்கிறதாம். என்னை நன்றாகப் போஷிக்கிறார்கள். இப்போது என்னைக் கண்டால் மகாராஜாகூட எனக்குச் சலாம் போடணுமாக்கும்! மஹாராஜா என்பது நிலைத்தால் நானும் பட்டத்து யானையாக ஒரு 'சான்ஸ்' இருக்கிறது. இல்லையானால் பிஸ்ஸ்..'' தான்.

மைசூர் வந்தால் என்னை வந்து பாருங்கள். வரும்போது மறக்காமல் அரிசி, வெல்லம், கரும்பு எல்லாம் கொண்டுவாருங்கள். அவைதான் இப்போது எனக்குப் பிடிக்கிறது.

கோடை லீவு

ஆர். சரஸ்வதி

கோடைலீவு தீரலாச்சு
கொட்டமடங்கிப் போகலாச்சு
ஓட்டம்ஆட்டம் கூத்தைஎல்லாம்
ஒதுக்கிவைக்கும் காலமாச்சு.

பள்ளிக்கூடம் திறக்கலாச்சு
பாடம் உயிரை வாங்கலாச்சு
துள்ளிஓடி ஆடும்நம்மைத்
தும்புக்கயிற்றில் கட்டலாச்சு.

எட்டுமணிக்குத் தூங்கப்போகும்
எண்ணம்பாழாய் ஆகலாச்சு
குட்டைத்தலையில் வாங்கிக்கிட்டு
குருட்டுக்கணக்கைப் போடலாச்சு.

ரெண்டுமாச விடுமுறையும்
ரொம்பச்சுருக்கா தீந்துபோச்சு
மண்டு, மக்கு, பட்டம்வாங்கி
மானம்காற்றில் பறக்கலாச்சு.

பழைய பாக்கி

கே. எஸ். பி.

காலையில் எழுந்ததும் முகக்ஷவரம் என்பது என் தந்தையோடு கூடவே பிறந்த கொள்கை. அதிகாலையில் எழுந்து ஷேவ் செய்துகொண்டு வழவழவென்ற முகத்தையும் தாடைகளையும் தடவிப்பார்த்துக்கொண்டு ஆபீசுக்குச் செல்லும் நாகரிக வழக்கம் அவரிடம் குடிகொண்டது அற்புதந்தான்.

*   *   *

எனக்கு அப்போது வயது எட்டு. வழக்கப்படி வீராசாமி வந்திருந்தான். தொழிலிலே கண்ணியமானவன் வீராசாமி. பளபளவென்று டாலடிக்கும் அவன் பட்டாக் கத்திக்கே இரண்டணு என்ன, இரண்டு ரூபாய் கொடுக்கலாம்! நாற்பத்திமூன்று டிகிரி சாய்வில் அது என் தந்தையின் கன்னங்களில் கரகரவென்று பாய்ந்து இரும்புத் தூள் ரோமத்தைச் சீவித் தள்ளும் அழகும், எதிர்பாராமல் இரண்டு மூன்று இடங்களில் கத்தி சதைக்குள் புகுந்து ரத்தத்தை வரவழைப்பதும் ரசிக்கத்தக்க காட்சிகள்!

அப்பாவும் விடாமல் நச்சரிப்பார்:

''இன்னிக்கு எத்தனை காயம்!''

''புதுக் கத்திங்க; என்ன சொகுசா ஓடுது; ஒரு 'கட்' உண்டா?''

இரண்டணு நாணயம் ஒன்று அவன் முகப் பரவசத்துக்கு வழி காட்டும்.

நாட்கள் சென்றன. வீராசாமியோடு நான் வெகுதூரம் பழகிவிட்டேன். சாயங்கால வேளைகளில் அவன் கோவிலில் மேளம் வாசிப்பான். இரவில் ஊர்ச் சிறுவர்களைக் கூட்டி அழைத்துக் கேலியாகக் கதை சொல்லுவான்.

மூன்று மாதம் சென்றிருக்கும்.

ஒரு நாள் மாலை—

பரக்கப் பரக்க வீராசாமி என் தந்தையிடம் ஓடிவந்தான்.

''சாமி! ஒரு பத்து ரூபாய் அர்ஜென்டா வேணும்; மாமன் மவனுக்குக் கண்ணலம் தில்லாக்கேணியிலே; உடனே கிளம்பணும். கோயில்லே சம்பளம் வந்ததும் ஏழு ரூபா தந்துடறேன். மீதியை க்ஷவரத்திலே கழிச்சுக்குங்க!''

பத்து என்ன, பதினைந்து கொடுப்பதற்கும் என் தந்தை அப்போது தயாராகயிருந்தார்.

காலேஜ் அட்மிஷன்!

வந்தவர்: பிரின்ஸிபாலை இப்போ பார்க்க முடியுமா, அப்பா?

பியூன்: என்ன விஷயம்?

வந்தவர்: 'அட்மிஷன்' விஷயம்தான்!

பியூன்: அதுதான் மேலே 'NO ADMISSION' போர்டு போட்டிருக்குதே, தெரியலே?

—பெ. கலாசாமி, தூத்துக்குடி.

ஒரு வாரம் ஆகிவிட்டது. திருவல்லிக்கேணி சென்ற வீராசாமி திரும்பவேயில்லை. என் தந்தைக்குப் பத்து ரூபாய் போன கவலைகூட அவ்வளவு இல்லை; நம்பகமான ஆள் போய்விட்டானே என்ற வருத்தம்!

மறுநாள் என் பாட்டி காசி யாத்திரையிலிருந்து திரும்பி வந்தாள். இரவுச் சாப்பாட்டின்போது வீராசாமியைப் பற்றியும் பத்து ரூபாய் மோசம் போன கதையையும் சொன்னேன்.

பாட்டி பொக்கை வாயை மென்றபடியே சிரித்தாள்.

"அட பாவமே—!"

"ஏன் பாட்டி....?"

"உன் தாத்தா இந்த வீராசாமியின் அப்பன்கிட்டேதான் க்ஷவரம் செய்துக்கற வழக்கம். ஒரு சமயம் அவன் வந்து மேளம் வாசிச்சான். பத்து ரூபாய் தரவேண்டும். தாத்தா பணம் தரவேயில்லை. அப்புறம் உடம்புக்கு வந்தது. அப்படியே செத்தும் போயிட்டார். அவனும் போயிட்டான். எனக்கு மறந்தே போச்சு. அதை இவன் என் பிள்ளைகிட்டே வசூல் செஞ்சுட்டானே....!"

அப்பாவின் முகம் பேய் அறைந்த மாதிரி இருந்தது. என் தாத்தாவின் கடனை அப்பா அடைத்திருக்கிறார், அவ்வளவுதானே!

"தாத்தா செஞ்சது அவனுக்கு எப்படிப் பாட்டி ஞாபகம் இருக்கும்...?"

"அவனுக்குத் தெரியலேன்னாலும் கடவுள் இல்லையா? அவர் எல்லா நியாய அநியாயங்களையும் பார்த்துண்டுதானே இருக்கார்....!"

வானத்தை ஆச்சரியத்தோடு பார்த்தேன். ஒரு நட்சத்திரம் என்னைப் பார்த்துக் கண் சிமிட்டியது!

ஏமாந்த சோணாசலம்!

தங்கமணி

முன்னிரவு எத்தனை மணி என்று தெரியவில்லை. சுமார் பத்து மணி..அதற்கு மேலும் இருக்குமோ, என்னவோ! மழை லேசாகப் பிசுபிசுத்துக் கொண்டிருந்தது!..

துறைமுக வாசலில், கப்பல் தொழிலாளரிடையே காபி விற்று விட்டு, கெட்டிலையும் வாளியையும் தூக்கிக்கொண்டு முனிசாமி வீட்டுக்குக் கிளம்பினான். அருகிலுள்ள சேரிக்குள் ஒரு மூலையிலிருக்கும் தன் குடிசைக்குச் சென்றான். குடிசைக்குள் நுழையப்போனவன், திண்ணையின்மீது சுருண்டு படுத்திருந்த யாரோ ஒரு பையனைப் பார்த்ததும் திடுக்கிட்டான். நின்றான். "ஏய்! யாரது? லைசென்ஸ் இல்லாமல் வந்து படுத்துக்கொண்டிருக்கிறாயே!..இது சத்திரமா, சாவடியா, உம்..?" என்று அதிகாரமாக அதட்டினான்.

அந்தப் பையன் எழுந்திருக்கக் காணோம். முனிசாமியின் அதட்டல் சத்தத்தை அவன் உணர்ந்ததாகவே தெரியவில்லை. நல்ல தூக்கம்! முணுமுணுத்துக் கொண்டே கையிலிருந்தவைகளைக் கீழே வைத்துவிட்டு, "டேய்! டேய்!.." என்று, அந்தப் பையனை உலுப்பி எழுப்பினான்.

அந்தப் பையன், தூக்கம் சிதறித் துள்ளி எழுந்தான். அருகில் நிற்கும் முனிசாமியைப் பரபரப்புடன் பார்த்தான். அழுக்குப் பிடித்துப் பிசுக்கேறிய சட்டைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் பார்த்தான். "அண்ணாச்சி..கோபிக்காதே, அண்ணாச்சி. மழைக்காக ஒதுங்கினேன்..பசி மயக்கம்..அப்படியே படுத்துட்டேன்.."

முனிசாமி, அந்தப் பையனை உற்றுப் பார்த்தான். பசியால் வாடிய முகம், துயரத்தால் சிவந்த கண்கள், கதியற்ற கந்தல் கோலம்! அவன் மனம் இளகியது. அந்தப் பையனின் பரிதாபமான நிலையை எண்ணி, அவன் பச்சாதாபப்பட்டான். அவனை அன்புடன் கேட்டான்: "தம்பி, யார் நீ..? உள்ளூரா - வெளியூரா..?"

"வெளியூர்தான். கோயம்புத்தூரிலிருந்து வந்துவிட்டேன்.."

"கோயம்புத்தூரிலிருந்தா இங்கே வந்திருக்கே? தன்னந்தனியாகவா? ஏன்? பரீட்சையில் 'கிர்ட்சை'யில்...."

"அதெல்லாம் ஒன்றுமில்லை, அண்ணாச்சி. நான் பள்ளிக்கூடத்தை விட்டு நின்றே நாலைந்து வருஷங்களாகின்றன. வந்து.."

"தம்பி, நீ ரொம்பப் பசியாயிருக்கிறாய். எனக்கும் வயிற்றைக் கிள்ளுகிறது. வா, ரொட்டி சாப்பிட்டுவிட்டுச் சௌகரியமாகப் பேசலாம்."

அன்று நடுப் பகலின்போதே சுட்டுவைத்திருந்த நாலைந்து கோதுமை ரொட்டிகளை ஆளுக்குப் பாதியாகப் பங்கிட்டு, முனிசாமியும் அந்தப் பையனும் சாப்பிட்டார்கள். கெட்டிலில் கடைசியாக மீந்து எடுத்துவந்த இரண்டு குவளை சுக்குக் காபியையும் குடித்துவிட்டு, இருவரும் திண்ணைக்கு வந்து அமர்ந்தார்கள்.

"ம், உம்..முதலில் உன்னுடைய பேரைச் சொல்லிவிட்டு, உன் கதையைச் சொல்.." என்றான் முனிசாமி.

"என் பேர் சோணாசலம். ஆமாம், இந்த வீட்டில்.."

"நான் ஒருவன்தான் வசிக்கிறேன். அப்பா, அம்மா, அக்கா, தங்கை யாரும் கிடையாது. ஆனால், ஒரே அண்ணன் மட்டும் இருக்கிறான். அவன் எப்போதாவது வருவான், போவான். அவனுக்கும் எனக்கும் உறவு எல்லாம் அவ்வளவுதான்! அந்தக் கதையெல்லாம் கிடக்கட்டும், உன் கதையைச் சொல்லு, தம்பி.." என்றான் முனிசாமி.

சோணசலம்சொன்னன்:

''..கோயம்புத்தூரிலே என் அப்பா, அம்மாவோடு சந்தோஷமாகத்தான் இருந்தேன். ஆனல், எனக்கு ஏற்பட்ட ஒரு புதுப் பழக்கந்தான் நான் அவர்களைப் பிரிந்து வந்துவிட்டதற்கு மூல காரணம். நான் ஹரிஜனப் பையன்களிடம் மிகவும் நெருங்கிப் பழகுவேன். சிநேகம் செய்வேன். அடிக்கடி அவர்கள் வீட்டுக்குச் செல்வேன்; சாப்பிடுவேன். அவர்களையும் என் வீட்டுக்கு அழைத்துச் செல்வேன். விருந்து வைப்பேன். என்னுடைய நடத்தை என் அப்பாவுக்கும் அம்மாவுக்கும், ஏன் - பள்ளிக்கூட வாத்தியார்களுக்கும் வேம்பாய்க் கசந்தது. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளால் தான் எனக்கு இந்தக் கெட்டப் பழக்கம் உண்டாயிற்று என்று அப்பா நினைத்தார். என்னல் பள்ளிப் பிள்ளைகள் கெட்டுவிடுவார்கள் என்று வாத்தியார்கள் நினைத்தார்கள். 'கெட்டுவிடுவார்கள்' என்பதில் என்ன அர்த்தமிருக்கிறதோ, புரியவில்லை! அன்பால் கெட்டுவிடுவார்களோ?—அறிவால் கெட்டுவிடுவார்களோ? இதனலேயே, நான் பள்ளிக்கூடம் போக முடியாமல் போய்விட்டது. வீட்டைவிட்டு வெளியே எங்கும் போகக்கூடாது; சேரிப் பையன்களைக் கனவிலும் நினைக்கக்கூடாது - இன்னும் இதுபோன்று பல தடையுத்தரவுகள்!

''என்னதான் இருந்தாலும், இந்தச் சிறை வாழ்க்கை எனக்கு அடியோடு வெறுத்துவிட்டது! சுதந்தர நாட்டில் வாழும் சுதந்தரத் தம்பிக்கு இப்படிப்பட்ட அன்பில்லாத வாழ்க்கை எப்படித்தான் பிடிக்கும்? ஆகவே, மனம் கசந்து அப்பா, அம்மாவைப் பிரிந்துவிட்டேன்.''

சோணசலம் நீர் துளித்த கண்களைக் கசக்கிக்கொண்டே மெல்ல விசித்தான்; தேம்பினன். அவனுடைய தியாக உணர்ச்சி நிறைந்த சோகக் கதையைக் கேட்டதும், முனிசாமிக்கு மனசே ஒரு மாதிரியாகப் போயிற்று. ''தம்பி, அழாதே தம்பி. 'நல்லவனுக்கு இது காலமில்லை' என்று பெரியவர்கள் சொல்லக் கேட்டதில்லையா..? ஹூம்! எங்கள் ஜாதி என்ருலே, பல பேருக்கு இஞ்சிக் கஷாயம் குடித்தது போலத்தான் இருக்கிறது. ஹூம்!..என்றைக்குத்தான் காந்தித் தாத்தாவின் கனவு நனவாகப் போகிறதோ! சரி.., நேரமாகிறது. வா, படுத்துக்கொள்வோம்'' என்று குடிசைக்குள் சென்று துப்பட்டியை விரித்துப் போட்டான் முனிசாமி.

முரட்டுத் தம்பி!

பெரியவர்: ஏன் அம்பி! அண்ணாவையா 'போடா, வாடா' என்று பேசுகிறது? மரியாதை வேண்டாமா?

அம்பி: தம்பிதான் முரடனா யிருக்கானே! அவனை அப்படிச் சொல்ல முடியவில்லையே!

—பி. கலாசாமி. தூத்துக்குடி.

விடியவில்லை. ஆமாம், பொழுது விடிவதற்கு இன்னும் கொஞ்ச நேரம் இருந்தது. சொல்லி வைத்ததுபோல, முனிசாமி தூக்கம் கலைந்து எழுந்தான். கண்ணைத் தேய்த்துக்கொண்டு குடிசைக்கு வெளியே பார்த்தான். கருக்கிருள்! மழை இன்னமும் பிசுபிசுத்துக்கொண்டேதான் இருந்தது. மணி எத்தனை இருக்கும் என்று அவனால் ஊகிக்க முடியவில்லை. அந்தச் சமயத்தில் எங்கேயோ ஒரு சேவல் கூவியது!

முனிசாமி எழுந்தான். சோம்பல் முறித்துக்கொண்டான். அப்போது, சோணாசலத்துக்குப் பக்கத்தில் தலையிலிருந்து கால்வரை லுங்கித் துணியால் இழுத்துப் போர்த்துக்கொண்டு படுத்திருக்கும் அந்த மனிதன்மீது அவன் பார்வை சென்றது.

முனிசாமியுடைய போக்கிரி அண்ணன் குப்பன்தான் அவன்.

'ஊர் சுற்றி ஊதாரிப் பயல்! அங்கே எங்கேயும் பிளாட்பாரத்தில் இடம் கிடைக்கவில்லை போலிருக்கிறது!' மனத்துக்குள் என்ன என்னவோ அருவருப்புடன் கூறியவாறே, முனிசாமி அருகிலிருந்த மரப்பெட்டியை அணுகினான். அதைத் திறந்தான். அதனுள் தயாராக வாங்கிவைத்திருந்த காபித்தூள், சர்க்கரை, பால்மாவு எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வந்தான். அடுப்பை மூட்டினான். காபி காய்ச்ச ஆரம்பித்தான்.

சற்றுநேரம் கழித்து, குப்பன் எழுந்தான். அடுப்பருகில் பால் மாவைத் தண்ணீரிலிட்டுக் கரைத்துக்கொண்டிருக்கும் முனிசாமியைப் பார்த்தான். ''முனிசாமி, மலையாளத்தான் கடைக்குப்போய், ஒன்றரையணாவுக்கு ஸ்ட்ராங்காக டீ வாங்கி வா. இரண்டுபேரும் குடிக்கலாம்!'' என்று கால்சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான்.

முனிசாமி, அவனையும் அவன் கையிலிருந்த நோட்டையும் வெறுப்புடன் பார்த்தான். ''வேலை நிறைய இருக்கிறது. நீயே போய் குடித்துவிட்டு..'' என்று இழுத்தான்.

''இரண்டுபேரும் குடிக்கலாம்டா. நீ நாஸ்தா பண்ணுவதற்கு நாலணா எடுத்துக்கொள்.''

''ஹை!..இவர் கொடுப்பார் என்றுதான் நான் காத்திருக்கிறேன்போலிருக்கிறது!'' முனிசாமி பேச்சை நிறுத்திக்கொண்டு வேலையில் நாட்டம் செலுத்தினான்.

இவர்கள் பேச்சுக் குரலைக் கேட்டுத்தானே, என்னவோ..சோணாசலம் திடுக்கிட்டுக் கண்விழித்து எழுந்தான். அருகில், முனிசாமியை வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கும் குப்பனைப் பார்த்தான். அவ்வளவுதான்! திடீரென்று,

"அண்ணாச்சீ! இவன்தான்! என்னை மோசம் பண்ணிய துரோகி, திருட்டுப் பயல் இவன்தான்!.." என்று கூவியவாறே பாய்ந்தான். குப்பனின் பூப்போட்ட புஷ்கோட்டைச் சேர்த்துச் சுருட்டிப் பிடித்துக் கொண்டு, "அடேய், கேடிப் பயலே! மரியாதையாக என் பணத்தைக் கொடுத்துவிடு! இல்லையென்றால்.. உன்னைச் சும்மா விடமாட்டேன்!.." என்று ஒரே கூச்சல் போட்டான்.

முனிசாமிக்குத் தூக்கிவாரிப் போட்டது! அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "சோணாசலம், என்ன சங்கதி? என்ன நடந்தது? அவன் சட்டையை விடு. எங்கேயும் ஓட மாட்டான்" என்றான்.

சோணாசலம் சட்டையை விட்டு விட்டு குப்பனைப் பார்த்து, "மரியாதையாக என் பணத்தைக் கீழே வை.." என்று மூச்சு முட்டக் கூறினான்.

"டேய், தம்பி. நடந்த சங்கதியைச் சொல். பணத்தை நான் வாங்கித் தருகிறேன்" என்றான் முனிசாமி.

சோணாசலம் சொன்னான்:

"கேளு, அண்ணாச்சி.. நாலைந்து நாட்களுக்கு முன்னே, இவன் கோயம்புத்தூருக்கு வந்திருந்தான். எனக்குச் சினிமாவிலே சேர்ந்து நடிக்கவேண்டும், புகழ்பெற வேண்டும், பெரிய பணக்காரனாக வேண்டும் - என்றெல்லாம் ஆசையாக இருந்தது. அந்த ஆசையை - பைத்தியத்தை - இவன் சூசகமாகப் பேசி என் மூலமாகவே தெரிந்து கொண்டான். 'நூறு ரூபாய் கொண்டு வா. சினிமாவில் சேர்த்து விடுகிறேன். பால நட்சத்திரமாக்கி விடுகிறேன்..' என்று என்னென்னவோ கூறி என் ஆசையைக் கிளப்பிவிட்டான். நான் இவன் பேச்சில் மயங்கினேன். அப்பா, விதைக்கு நெல் வாங்குவதற்காக நூறு ரூபாய் கடன் வாங்கி வைத்திருந்தார். திருட்டுத்தனமாக அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு இவனுடன் கிளம்பிச் சென்னைக்கு வந்தேன். இவன் நேரே, என்னை காமினி ஸ்டுடியோவுக்கு அழைத்துப் போனான். என்னிடமிருந்த பணத்தை வாங்கிக்கொண்டு, என்னை ஸ்டுடியோவுக்கு வெளியிலேயே நிற்க வைத்துவிட்டு உள்ளே போனான். அவ்வளவுதான், அதற்கப்புறம் ஆளையே காணவில்லை!.."

''அட ஏமாந்த சோணாசலமே! நீ இப்போது சொல்வது உண்மையாக நடந்ததா? ஹரிஜனப் பையன்களுக்காகப் பரிந்துகொண்டு வீட்டைவிட்டு வந்துவிட்டேன் என்றாயே, அந்தக் கதை உண்மையா?'' என்று குத்தலாகக் கேட்டான் முனிசாமி.

''அண்ணாச்சி, தயவுசெய்து மன்னித்துக்கொள், அண்ணாச்சி. உன்னுடைய அன்பையும் ஆதரவையும் பெறுவதற்காக முதலில் பொய் தான் சொன்னேன்'' முனிசாமியை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டான் சோணாசலம்.

''சட்! அறிவிழந்து ஆசையோடு ஊட்டி வளர்த்த அப்பனுக்குத் துரோகம் புரிந்தாய்! பசியால் பண்பிழந்து பச்சாதாபப்பட்டவனை ஏமாற்றிவிட்டாய்! பொய் கூறிய புளுகுணிப் பயலே! மனமறிந்து ஒழுக்கங்கெட்டுப்போன நீ, மகா மட்டமானவன்! துரோகி! வஞ்சகன்! வாயில் ஊறும் உமிழ்நீரை விழுங்கிவிடுவது இயற்கை. ஆனால், கீழே துப்பிவிட்ட எச்சிலை - அதைக் காலால் மிதிக்கக்கூட அருவருப்பாயிருக்கும்! தன் ஆசை நிறைவேறுதற்காக எதையும் செய்யத் துணியும் நீ, எச்சிலுக்குச் சமானமானவன்! அருவருக்கத் தகுந்தவன்! உன்னைவிட இவன் - எனக்கென்று வந்து அண்ணனாக வாய்த்த இவன் - எச்சிலைவிட வெறுக்கத் தகுந்தவன்! நீ எச்சில் என்றால், இவன் காசநோய்க்காரன் துப்பிய சளி!'' ..பிரசங்கமாரி பொழிந்தான், முனிசாமி.

''டேய், ஏன் வீணாகப் பிதற்றுகிறாய்?..இந்தா, பத்து ரூபாய். அந்தப் பையனிடம் கொடுத்து ஊருக்கு அனுப்பி வை!..'' முனிசாமியிடம் ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்துவிட்டு, லுங்கியைக் கட்டியவாறே குடிசையைவிட்டு விர்ரென்று வெளியே சென்றான், முட்டாள்களை ஏய்த்து வாழும் குப்பன்!

எண்ணிலே படங்கள்

1 முதல் 9 வரையில் 'முட்டை'



கவிமணித் தாத்தா

சசிதேவன்

அம்மா: கட்டிக் கரும்பாய், கற்கண்டாய்க்
கனியின் சாருய் இனிக்கின்ற
குட்டிக் கவிகள் சொன்னவர் யார்?
குழந்தாய் நீயும் அறிவாயோ?
சின்னச் சின்ன வார்த்தைகளில்
சிந்தை கவரும் சந்தத்தில்
சின்னஞ் சிறுவர் பாடிடவே
செஞ்சொற் கவிகள் செய்தவர்யார்?
துள்ளிக் குதிக்கும் கன்றுடனே
தோட்டம் தன்னில் மேய்ந்தஒரு
வெள்ளைப் பசுமேல் ஒருகவிதை
விரும்பிப் பாடிய கவிஞர் யார்?
கூட்டுப் புலியின் கர்ஜனையை,
கொடுமை நிறைந்த தோற்றமதை
வீட்டில் இருந்தே நாமுணர
விந்தைக் கவியொன் றெழுதியதார்?
தம்பிப் பாப்பா ஒருநொடியில்
தன்னை மறந்து தூங்க ஒரு
இன்பத் தாலாட்(டு) உரைத்தவர் யார்?
என்றன் கண்ணே, அறிவாயோ?

பையன்: அறிவேன் அம்மா நானறிவேன்;
அவரே கவிமணித் தாத்தாவாம்!
சிறுவர்க் கினிய கவிசொன்ன
சிறந்த புலவர் அவரேயாம்!



கவிஞர் வரிசை: 12

சீத்தலைச் சாத்தனார்

கி. வா. ஜகந்நாதன்

சேரன் செங்குட்டுவன் கலை வளம் காணுவதற்காகப் போயிருந்தான். அங்கே வாழ்ந்த மலைவாணர்களாகிய வேடர்கள் மான் கொம்பு, கவரிமானின் வால் முதலிய காணிக்கைகளோடு மன்னனை வந்து பார்த்தார்கள். அப்போது அவர்கள் தாம் கண்ட அதிசயம் ஒன்றை அரசனுக்கு எடுத்துச் சொன்னார்கள். ''அரசே ஒரு பெண் தன் கணவனை இழந்து வந்து இந்த மலையின்மேல் ஏறி ஒரு வேங்கை மரத்தின் அடியில் நின்றுகொண் டிருந்தாள். அப்போது வானவர்கள் விமானத்தில் அவள் கணவனோடு வந்து, அவளை அழைத்துக்கொண்டு சென்றதைக் கண்டோம்!'' என்றார்கள். அதைக் கேட்டபோது அங்கே இருந்த சீத்தலைச் சாத்தனார், ''எனக்கு அந்தப் பெண்ணைப் பற்றிய செய்திகள் தெரியும்'' என்று சொன்னார். அப்போது அங்கே செங்குட்டுவனுடைய மனைவியும் அவன் தம்பியாகிய இளங்கோவடிகளும் இருந்தார்கள்.

சீத்தலைச் சாத்தனார், ''கண்ணகியை, மதுரை நகருக்குக் காவல் தெய்வமாகிய மதுராபதி இரவிலே கண்டு பேசியதை நான் கேட்டேன். மதுரைக் கோயிலில் நான் படுத்துக் கொண்டிருந்த பொழுது இது நிகழ்ந்தது'' என்று சொல்லி, கண்ணகியின் கணவன் கோவலன் கொலையுண்டதையும் பத்தினியாகிய கண்ணகி மதுரையை எரித்ததையும் எடுத்துச் சொன்னார். கண்ணகியின் வரலாற்றைக் கேட்டு யாவரும் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவளுடைய கதையைக் காவியமாகச் செய்தால் நன்றாக இருக்கும் என்று சாத்தனார் எண்ணினார். 'இளங்கோவடிகளும் புலமையுடையவராதலின் மரியாதைக்காக அவரையே அந்தக் காவியத்தைப் பாடும்படிச் சொல்லலாம். அவர் எங்கே ஏற்றுக்கொள்ளப் போகிறார்? நம்மையே பாடும்படிச் சொல்வார்' என்று எண்ணி, ''இந்தப் பத்தினித் தெய்வத்தின் கதையை அடிகளாகிய நீங்களே பாடியருள வேண்டும்'' என்றார். துறவி இந்தக் கதையில் ஈடுபட மாட்டார் என்றும் நினைத்தார். ஆனால் இளங்கோவடிகள் மனத்தைக் கண்ணகியின் கதை உருக்கிவிட்டது. சாத்தனார் சொன்னவுடன், ''அப்படியே செய்கிறேன்'' என்று ஒப்புக்கொண்டு விட்டார்.

கண்ணகியின் கதையைக் காவியமாகப் பாடவேண்டும் என்ற ஆர்வத்தோடு இருந்தவர் சாத்தனார். இப்போது அதற்கு இடம் இல்லாமற் போயிற்று. ஆனாலும் ஏதாவது ஒரு காவியத்தை இயற்றாமல் இருப்பதில்லை என்ற வேகம் அவருக்கு உண்டாயிற்று. கண்ணகியின் கதையைப் பாட முடியாவிட்டாலும் கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலையின் கதையையாவது பாடலாம் என்ற ஊக்கம் பிறந்தது. விரைவிலே அதைப் பாடி முடித்துவிட்டார். இந்த இரண்டு காவியங்களும் சேர்ந்தே தமிழ் நாட்டில் உலவலாயின. பிற்காலத்தில் ஐம்பெருங்

காப்பியங்கள் என்று ஒரு வரிசையைப் புலவர்கள் பாராட்டிச் சொல்வார்கள். அந்த ஐந்தில் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் முதலில் நிற்கின்றன.

சாத்தனருக்குச் சீத்தலைச் சாத்தனர் என்று பெயர் வந்ததற்கு ஒரு காரணம் உண்டு. நல்ல கவிதையைக் கண்டால் அவர் மிகவும் விருப்பத்தோடு படிப்பார். தவருன கவிதைகளையும் சுவையற்ற கவிதைகளையும் கண்டால் அவருக்குப் பிடிப்பதில்லை. கவி பாடியவர்களைக் கண்டு பிடித்து வைய முடியுமா? 'இந்தக் கவியைப் படிக்கும்படி நேர்ந்ததே' என்று தம் தலையில் குட்டிக் கொள்வார். ஒரு சமயம் ஏதோ ஒரு நூலைப் படித்தார். அது மட்டமான கவிகள் அடங்கியது.

அதைப் படிக்கவே சகிக்கவில்லை. வழக்கம் போலத் தலையிலே குட்டிக் கொள்ளப் போனர். அப்போது அவர் கையில் எழுத்தாணி இருந்தது. அந்த நினைவே இல்லாமல் அவர் குட்டிக்கொண்டபோது எழுத்தாணி தலையில் குத்தி விட்டது. ஆழமாகக் குத்தி ரத்தம் பீரிட்டது. புண் உண்டாயிற்று, பிறகு அது சீழ் பிடித்து ஆறுவதற்குப் பல நாட்கள் ஆயின.

அவர் தலையில் கட்டுக் கட்டிக் கொண்டிருந்ததை நண்பர்கள், ''என்ன புலவரே, கட்டு?'' என்று கேட்டார்கள்.

''புண்; சீழ் கட்டியிருக்கிறது.''

''என்ன புண்?''

''சுவையற்ற கவிதையைக் கண்டு குத்திக் கொண்டதனல் வந்த வினை!''

''ஐயோ பாவம்! நீங்கள் சீத்தலைச் சாத்தனர் ஆனது தெரிந்தால் மட்டமான கவிகளை இனி மேல் யாரும் எழுத மாட்டார்கள். எழுதினலும் உங்களிடம் காட்ட மாட்டார்கள்'' என்று அவர்கள் சொன்னர்கள்.

அது முதல் அவரைச் சீத்தலைச் சாத்தனர் என்றே யாவரும் அழைக்கத் தொடங்கினர்கள்.

ஜோடி சேர்!



மேலே உள்ள படங்களைப் பாருங்கள். ஒரு கட்டத்திலே செங்கல் இருக்கிறது. மற்றோரிடத்திலே பட்டு இருக்கிறது. இரண்டையும் சேர்த்தால் செங்கல்பட்டு என்ற ஊரின் பெயர் வருகிறது. இதேபோல இரண்டு இரண்டு கட்டங்களை இணைத்துப் பார்த்தால் பத்து ஊர்களைக் காணலாம். இவற்றில் உங்களால் எத்தனை ஊர்கள் கண்டு பிடிக்க முடிகிறது என்று பாருங்கள். முழுவதும் முயன்று பார்த்த பிறகு உங்கள் விடையை மூன்றாவது அட்டையில் பாருங்கள்.

விஞ்ஞானம் பேசுகிறார்
II
புரொபஸர் விஞ்ஞானம்
நமஸ்காரம், ஸார்.
நமஸ்காரம். நானும் கூட வந்திருக்கிறேன். இந்த லீவில் நாங்கள் உங்களைக் கேள்விகள் கேட்கப் போகிறோம்.
போன தடவை அந்தப்படி நடந்தது! நீங்கள் அவ்வப் போது மனத்துக்குத்தோன் றியதைக் கேட்டீர்கள். தந்தி, மின்சார விளக்கு டெலிபோன், பேசும்சினிமா ரேடியோ, ஜெட் விமானம் டெலிவிஷன், எக்ஸ்-ரே, இன்னும்என்னஎன்னவோ எல்லாம் பற்றிக் கேட்டீர் கள். சொன்னதை நினைவு வைத்துக்கொண் டிருப்பீர் கள் என்று நினைக்கிறேன்.



ஆதி மனிதன் குடும்பம்

அவர்கள் சிறு சிறு குடும்பங்களாக இங்கே சிலரும் அங்கே சிலருமாக ஒதுங்கி வாழ்ந்தார்கள். காட்டில் வாழும் சிற்சில பிராணிகளை வேட்டையாடிக் கொன்றார்கள். முதல் முதலில் அவர்கள் பெரிய கற்களையும், மரக்கிளைகளையுமே ஆயுதங்களாக உபயோகித்தார்கள். பிறகு, கல்லாலும் அதற்குப் பிறகு, உலோகத்தாலும் ஈட்டிகளைச் செய்யக் கற்றுக்கொண்டார்கள்.

தாங்கள் வேட்டையாடிக் கொன்ற மிருகங்களை அவர்கள் பச்சையாகவே தின்றார்கள். அந்தக் காலத்திலே கால் நடையாகத்தான் பிரயாணம் செய்தார்கள். தங்களிடம் ஏதாவது அற்ப சொற்பம் மூட்டை முடிச்சுக்கள் இருந்தால், அவைகளைத் தூக்கிக்கொண்டு, அவர்கள் இடம் இடமாகச் சென்றார்கள்.

இந் நாளிலும்கூடச் சிற்சில இடங்களில் மனிதர்கள் சுமைகளைத் தூக்கிச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆப்பிரிக்காவில் பாதைகள் இல்லாக் காடுகளில் செல்பவர்களும், இமயமலை போன்ற மலை உச்சிகளில் ஏற முயல்பவர்களும் தங்கள் சாமான்களைத் தலைச் சுமையாகவே எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது.

மலை ஏறுபவர்கள்

ஆப்பிரிக்காவில் லிவிங்கஸ்டன் முதலியோர் செல்லும்போது இப்படித்தான் ஆள் தலையில் சுமைகளை ஏற்றிக் கொண்டு போனார்கள். பிறகு மனிதர்கள் பிராணிகளைப் பழக்கக் கற்றுக் கொண்டார்கள். இப்படி மனிதர்கள் காட்டுப் பிராணிகளை வீட்டுப் பிராணிகளாகப் பழக்கிய பழங்காலம் எது என்று இன்னும் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை. மிகப் பழங்காலம் ஒன்றுக்கு 'மிகப் புது யுகம்' என்று பெயர். அந்தக் காலத்தில் குகைகளில் வாழ்ந்த மனிதர்கள் பிராணிகளைப் பழக்கத் தெரிந்து கொள்ளவில்லை. அதற்கு அடுத்த காலத்துக்குச் 'சரித்திரத்துக்கு முந்திய காலம்' என்று பெயர். அந்தக் காலத்திலேதான் மனிதர்கள் காட்டுப் பிராணிகளைப் பழக்கி வீட்டுப் பிராணிகள் ஆக்கினார்கள்.
ரெயின்டீர் வண்டி இழுத்தல்
மனிதன் குதிரை சவாரி செய்தல்
ஆடு, மாடு, கழுதை, குதிரை, முதலியவை அவைகளில் சில. மூட்டை முடிச்சுக்களைச் சுமக்க அவைகளை உபயோகித்தார்கள். குளிர்ப பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் 'ரெயின்டீர்' என்னும் பனிக் கலைமான் வகையையும், பாலைவனங்களில் வாழ்ந்தவர்கள் ஒட்டகங்களையும், நம் நாட்டின் சில பகுதிகளில் யானைகளையும் பழக்கினார்கள்.

நாங்கள் அரச
னின் வீரர்கள். அந்தப்
பையனைப் பார்த்தால்
எங்கள் இளவரசன் மது
ராந்தக சோழனைப் போல்
இருக்கிறன். அதனால் காணா
மல் போன பராந்தகனாக
இருக்குமோ என்று
வந்தோம்.
என்ன ....
மதுராந்தகனைப்
போலவா?
யார் அங்கே?
இவர்கள் இரு
வரையும் அருவிப் பள்
ளத்தில் தள்ளி விடுங்கள்!
உம் போங்கள்!

புலிக்குட்டி மதுராந்தகனைப் போலிருக்கிறான்! உம்.. இது இப்போது தெரிந்தது எவ்வளவு நல்லதாயிற்று!
இன்று முதல் எந்த அந்நியரைக் கண்டாலும் உன் முகத்தைக் காட்டாதே. சோழர்கள் உன் குல எதிரிகள். அவர்களுக்கு நம் முகத்தைக் காட்டுவதே அவமானம்!
இந்தச் சம்பவம் நிகழ்ந்த பல மாதங்களுக்குப் பிறகு வேங்கடமலைக் கோட்டையை அடுத்த காட்டின் நடுவே புலிக்குட்டி தனியே போய்
ஒரு பிள்ளையார் கோயிலையும் பக்கத்திலே ஒரு குடிசையையும் தற்செயலாகப் பார்க்கிறான்.. உடனே குதிரையை விட்டிறங்கி
☆

யாரப்பா நீ? குரல் கூடக் கொடுக்காமல் உள்ளே நுழைவது?
வேங்கட மலைக் கோட்டையிலிருந்து வருகிறேன். என் பெயர் புலிக்குட்டி. இங்கே ஒரு கோயில் இருப்பது இது வரை எனக்குத் தெரியாது. அதனால் வந்தேன்.
பக்கத்திலே அப்படி ஒரு கோட்டை இருக்கிறதா என்ன? சோழர்கள் கோட்டை கட்டுவதிலே பெரிய நிபுணர்கள் போலிருக்கிறதே!

(தொடரும்)

குருடனும் நொண்டியும்

வெகு காலத்துக்கு முன்னே ஒரு ராஜா இருந்தார். ராஜாவுக்கு ஒரு பெண் இருந்தாள். ஒரே பெண் ஆதலால் ராஜாவுக்கு அவள் மிகவும் செல்லப் பெண். அந்தப் பெண் அபார புத்திசாலியும்கூட. அவளுக்கு மாம்பழம் என்றால் ரொம்ப ஆசை. அது அந்தத் தேசத்திலே கிடைப்பது அபூர்வமாயிருந்தது. ராஜா மிகவும் சிரமப்பட்டு அவளுக்காகத் தோட்டத்தில் பல மாங்கன்றுகளை நட்டுப் பயிரிட்டார். ராஜகுமாரி ஒரு கிழவனைக் காவல் போட்டாள். மாங்கன்றுகள் வளர்ந்து மரமாகி விட்டன. ஐந்தாவது வருஷத்தில் காய்க்க ஆரம்பித்துவிட்டன. மாசி, பங்குனியில் பிஞ்சு வைத்தன. சித்திரை வைகாசியில் காயாகிப் பழுக்கத் தொடங்கிவிட்டன.

ராஜகுமாரி ஒவ்வொரு நாளும் வருவாள். பிஞ்சுகளைப் பார்ப்பாள்; காய்களைப் பார்ப்பாள். ஒன்றையும் தொடமாட்டாள். காய்கள் எல்லாம் பழுக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

முதலில் சில காய்கள் பழுத்தன. செக்கச் செவேலென்றும் மஞ்சள் மசேலென்றும் தொங்கின. கைக்கு எட்டிய ஒன்றிரண்டைப் பறித்து மோந்து பார்த்தாள், அப்பா! என்ன வாசனை! என்ன வாசனை! ''சரி; இன்று பழுக்கட்டும்; நாளை பார்த்துக் கொள்ளலாம்'' என்று அரண்மனைக்குப் போனாள்.

மறு நாள் ஆவலோடு அவள் தோட்டத்துக்கு வந்து பார்த்தால் மரத்திலே ஒரு பழத்தைக் கூடக் காணவில்லை. காய்கள் மட்டும்தான் இருந்தன. பழங்களை யாரோ திருடிக்கொண்டு போய் விட்டார்கள் என்பது தெரிந்தது. அசாத்திய கோபத்தோடு காவல்காரனைக் கூப்பிட்டாள்; தோட்டத்துக்கு வெளியே ஒரு நொண்டியும் குருடனும்தான் இருந்தார்கள். வேறு யாரும் இல்லை.

''இனிமேலாவது எச்சரிக்கையாக இரு!'' என்று சொல்லி விட்டுப் போனாள். மறுநாளும் பழங்கள் திருட்டுப் போயிருந்தன. ''சரி; இந்தக் கிழக் காவற்காரன் உபயோகமில்லை. வேறு யாரையாவது போட வேண்டும்'' என்று ராஜா யோசனை செய்தார். கடைசியாக வெளியிலிருந்த நொண்டியையும் குருடனையும் அழைத்து அந்தத் தோட்டத்துக்குக் காவல் போட்டார்கள்.

'குருடனால் பார்க்க முடியாது; நொண்டியினால் நடந்து போய் மரம் ஏற முடியாது. அதனால் பழத்தை இவர்கள் திருட மாட்டார்கள்' என்று வாசலில் காவல் போட்டு, தோட்டத்தைச் சுற்றி சேவகர்களை நிறுத்தினார் ராஜா.

மறுநாள் ராஜகுமாரியும் ராஜாவும் ஆவலோடு வந்து தோட்டத்தைப் பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்! இன்றும் ஒரு பழத்தைக்கூடக் காணவில்லை. வெளியிலோ சேவகர்கள் காவல் இருந்தார்கள். வாசலில் நொண்டியும் குருடனும் இருந்தார்கள். அப்படி இருக்க, பழங்கள் எப்படித் திருட்டுப் போயின?

ராஜாவுக்கும் ராஜகுமாரிக்கும் மிகவும் யோசனையாகப் போய் விட்டது.

திடீரென்று ராஜகுமாரி துள்ளிக் குதித்தாள். ''தெரிந்துவிட்டது! தெரிந்துவிட்டது!'' என்று கூவினாள்.

''எப்படி?'' என்றார் ராஜா.

''டேய் நொண்டி, இங்கே வா!'' என்றாள். நொண்டிக்கொண்டே அவன் வந்தான். ''குருடா! அவனைத் தோளில் தூக்கிக் கொள்!'' என்றாள். குருடன் நொண்டியைச் சுமந்தான். ''நட மரத்தை நோக்கி!'' என்றாள். குருடன் நடந்தான்.

''இப்படித்தான் இவர்கள் இவ்வளவு நாளும் திருடியிருக்கிறார்கள்'' என்றாள் புத்திசாலியான ராஜகுமாரி.

திருடர்களுக்குத் தண்டனை கிடைத்தது. ராஜகுமாரிக்குப் பழங்கள் கிடைத்தன. —பிரசாத்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN,

கண்ணன் பரிசுத் தொடர்கதை

சென்ற ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நடைபெறும் தொடர்கதைப் போட்டியைப்பற்றி முன்பே அறிவித்திருக்கிறோம்.

நிபந்தனைகள்:—

(1) சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

(2) காகிதத்தின் ஒரே பக்கத்தில் மையினால் தெளிவாக இடம் விட்டு எழுத வேண்டும்.

(3) கண்ணன் இதழில் 6 பக்கங்கள் வீதம் 12 இதழ்களுக்கு மேல் போகாமல் இருக்கவேண்டும்.

(4) தேர்ந்தெடுக்கப்படும் கதையை கண்ணனில் தொடர்ச்சியாக வெளியிட்டு, புத்தகமாகவும் வெளியிடுவோம்.

(5) குழந்தைகள் - குழந்தை எழுத்தாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

(6) முடிவு தேதி 31—8—'56.

மற்ற விவரங்களை, 'குழந்தைகளே!' பகுதியில் காணலாம்.

—ஆசிரியர்.

விடை: ஜோடி சேர்

(இடமிருந்து வலம்) நெல்லி, முனை, மகுடம், செங்கல், வேலி, காவேரி, குப்பம், கல், பட்டு, சாவடி, ஈ, கோயில், பசுபதி, சுவாமி, திண்டு, பட்டணம், ரோடு, நெய், மலை, குமரி.

ஊர்கள்: 1. நெல்லி(க்)குப்பம், 2. செங்கல்பட்டு, 3. ஈரோடு, 4. நெய்வேலி, 5. திண்டு(க்)கல், 6. காவேரி(ப்)பட்டணம், 7. குமரிமுனை, 8. மகுடம் சாவடி, 9. பசுபதிகோயில், 10. சுவாமிமலை.